
1013

# வக்கீல்

பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை




16 MAY 1955
MADRAS
1013
2-55

ரெஸாக...

பொதுமக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கோர்ட்டு தீர்ப்புகளையும் மற்றும் பல சட்ட நுணுக்கங்களையும் எளிய தமிழ் நடையில் விளக்கும் மாத வெளியீடு...

**THE VAKIL ✦ TAMIL LAW MAGAZINE**

# "வக்கீல்" அறிவிப்பு.

## பிரசுரத்தேதி

"வக்கீல்" பத்திரிகை மாதம் ஒரு முறை பிரசுரம் செய்யப்பட்டு வரும். ஆனால் ஒவ்வொரு மாதமும் விஷயங்களை ஒட்டியும், சில முக்கிய சட்டங்களோ மசோதாக்களோ அம்மாதத்தில் வரக்கூடியவையாக இருந்தால் அவை வருவதை எதிர்பார்த்தும் "வக்கீல்" பிரசுரம் செய்யப்படும்.

## வருடச் சந்தாதார்கள்

வருடச் சந்தாதார்களுக்கு ரூ. 3-க்கு 12 இதழ்கள் கட்டாயமாக அந்தந்தப் பிரசுரத் தேதியிலேயே தபால் மூலம் அனுப்டப்படும். பத்திரிகை என் வரவில்லை என்று எந்த வருடச் சந்தாதாரும் அவசரப்பட்டுக் கடிதம் எழுதவேண்டிய அவசியமில்லை. ஆனால் சந்தாத் தொகை தீர்ந்து விட்டால், புதிய சந்தாத் தொகை ஆபீசுக்குக் கிடைக்கும் போதுதான் மறுபடியும் பத்திரிகை அனுப்ப முடியும். சந்தா இருக்கும் போதே, பத்திரிகை வரவில்லை என்ற சந்தேகம் தோன்றினால் பட்டியில் சந்தா நம்பரைக் கண்டு கடிதம் எழுதவும். சந்தா நம்பர் இல்லாத கடிதங்களைக் கவனிக்கக் காலதாமதம் ஏற்படும்.

"வக்கீல்" பத்திரிகைக்குச் சந்தாதார்கள் அனுப்பவேண்டிய சந்தாத் தொகையைக் கீழே கண்ட விலாசத்திற்கு மணியார்டர் மூலம் அனுப்பவும்; அல்லது நேரில் ஆபீசில் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவும். "வக்கீல்" பத்திரிகைக்குச் சந்தா சேர்க்கவும், ரசீது கொடுக்கவும், தொகை வசூல் செய்யவும் வேறு எவருக்கும் அதிகாரம் இல்லை.

## ஏஜண்டுகள்

ஏஜன்சி விதிகளின்படி டிபாசிட் அல்லது முன் பணம் உள்ள ஏஜண்டுகளுக்கு மட்டில் "வக்கீல்" பத்திரிகை பிரசுரம் செய்யப்படும் தேதியிலேயே அனுப்பப்படும். முன் பணமில்லாத ஏஜண்டுகள் தாமதமாகப் பணம் அனுப்பினால், அத்தொகை ஆபீசுக்குக் கிடைத்த பிறகு, அப்பொழுது அம்மாத இதழ் கைவசம் இருந்தால் அவர்களுக்கு அனுப்பப்படும். பிரதிகள் தீர்ந்துவிட்டால் அவர்களுக்கு அடுத்த மாத இதழ்கள்தான் அனுப்பப்படும். முன் பணம் இருப்பதாக நினைத்துக்கொண்டு ஆபீசுக்குக் கடிதம் எழுதும் ஏஜண்டுகள், அத்துடன் அவர்களுடைய கணக்கு நகலும் அனுப்பினால் அதை எங்கள் கணக்குடன் ஒத்துப்பார்த்துக்கொண்டு பதில் எழுதுவது சாத்தியமாகும்.

**மானேஜர்,**
**"வக்கீல்" தமிழ் சட்டப் பத்திரிகை**
**தபால் பெட்டி 26 : : கும்பகோணம் (S. I.)**


# கூட்டுறவுச் சட்டமும் விதிகளும். வினா-விடை.

ஆசிரியர்

**K. ஸ்ரீநிவாஸன் M. A.**

(தஞ்சை ஹூபிட் கூட்டுறவுப் பயிற்சிக் கழக விரிவுரையாளர்.)

1932ஆம் வருடத்திய கூட்டுறவுச் சட்டமும், 1934ஆம் வருடத்திய நில அடமான பாங்கிகள் பற்றிய சட்டமும் அவை சம்பந்தமான விதிகளும் வினா-விடை முறையில் எளிய தமிழ் நடையில் எழுதப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும், மெம்பர்களும் கட்டாயமாக வைத்துக் கொள்ளவேண்டிய புத்தகங்களில் இதுவும் ஒன்று.

விலை ரூ. **1—8—0.** தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

புத்தகம் கிடைக்குமிடம்:— **K. சீனுவாசன் M. A.**

ஹூபிட் கூட்டுறவுப் பயிற்சிக் கழகம், தஞ்சாவூர்.

# வக்கீல்

வாழிய செந்தமிழ் ! வாழ்க நற்றமிழர் !

மலர் 7 ஜனவரி—பிப்ரவரி 1955 இதழ் 1


18736

## நேருவின் இந்தியா

வருடத்திற்கு ஒருமுறை கூடிக் கலையும் நமது காங்கிரஸ் மகாசபையானது இவ் வருடம் தமிழ் நாட்டில் ஆவடியில் கூடிக் கலைந்து விட்டது. ஆனல் இதுவரை நடந்த எல்லா காங்கிரஸ் கூட்டங்களையும் விடப் பல வகைகளில், ஆவடி காங்கிரசானது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இது வரையில் நடந்திருக்கும் காங்கிரஸ் கூட்டங்களைவிட ஆவடியில் கூடிய ஜனத் திரள் மிக பிரும்மாண்டமானது. உலகில் வேறு எங்கேயும் கூட இவ்வளவு பெரிய கட்சிக் கூட்டம் கூடியதில்லை என்று அயல் நாட்டினர் சொல்லுகின்றனர். ஆவடியில் காங்கிரஸ் அரங்கமும், சத்தியமூர்த்தி நகரின் அமைப்பும், வசதிகளும், அங்கு விருந்தினர்களுக்கு நடந்த உபசரிப்பும், பல காங்கிரசுகளுக்கு விடாமல் போய்க் கொண் டிருப்பவர்களையும் பிரமிக்கச் செய்தன. இவை எல்லாம் நமது காமாராஜிடம் மறைந்து கிடக்கும் செயல் திறமையை அகில இந்தியாவுக்கும் எடுத்துக் காட்டின. இது தமிழ் நாட்டின் வெற்றியாகும்.

ஆனல், ஆவடியில் நடந்தது என்ன? அங்குக் கூடிய மக்கள் நேரு எங்கே எங்கே என்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். அடிக்கடி நேருவைப்பார்க்க வேண்டு மென்ற மக்களின் ஆரவாரம் வானை எட்டியது. ஆவடியில் கூடிய ஜனசமுத் திரத்தின் "நேருஜிக்குஜே" என்ற அலை ஓசை விடாமல் கேட்டுக் கொண்டிருந்தது. மக்கள் எதற்காக ஆவடியில் நேருவைத் தேடினர்? இதுவரையில் இவர்கள் நேரு வைப் பார்த்ததில்லையா? நேருவைப்பற்றிக் கேள்விப்பட்டதில்லையா? காரியமாகத்தான் இவர்கள் அன்று நேருவைத் தேடினர்! நேரு வந்ததும் ஆவடியில் கூடிய பாரத மக்களும் சரி, காங்கிரஸ் மகாசபையும் சரி, இந்தியாவைத்தூக்கி நேருவின் கையில் ஒப்படைத்து விட்டனர்! இந்தியா இனி நேருவின் உடைமையாகும்! இந்தியாவை நேருஜி எங்கேயோ அழைத்துக்கொண்டு போகின்றார். எங்கே? எங்கே என்பதைப் பார்க்கத்தான் ஐந்து லட்சம் பாமர மக்கள் ஆவடி வந்து கூடினர். எங்கே என்பதை முன்னதாகவே அறிந்து கொள்ளத்தான் ஆயிரக்கணக்கான கோடீசுவரர்களும், லட் சாதிபதிகளும், பெருநிலச் சீமான்களும் கவலையுடன் ஆவடி சென்றனர். எங்கே, என்பதை அறிந்து கொள்ளத்தான் இவ் வுலகின் பல அயல் நாட்டுத் தூதர்கள், ஐரோப்பியர்கள், அமெரிக்கர்கள், ஆப்ரிக்கா தேசத்தினர், ஜப்பானியர் உள்ளிட்ட ஆசிய நாட்டினர், எல்லோரும் ஆவடி வந்தனர். கம்யூனிஸ்டு நாடாகிய யுகோஸ்லவாகி யாவின் ஜனதிபதி மார்ஷல் டிட்டோவும் இதைப் பார்க்கவே மறுபடியும் இந்தியா வந்து ஆவடி சேர்ந்தார். இந்தியாவை நேரு எங்கே எடுத்துக் கொண்டு போகின்றார்? எந்த வழியாகப் போகின்றார்?

இந்தியாவானது ஒரு "சோஷலிஸ்ட்" நாடாக, அமைக்கப்படவேண்டுமென்று நேரு சொன்னர். சரி, என்றது ஆவடி காங்கிரஸ். மக்களின் நல்வாழ்வு மட்டில் போதாது; சமதர்ம சமுதாயத்தில் மக்கள் நல் வாழ்வு வாழ்வதேதான் நமது லட்சியம் என்று நேரு சொன்னர். சரி என்றது ஆவடி காங்கிரஸ். இந்தச் சமதர்ம (சோஷலிஸ) லட்சியத்தை நாம் அடைய, ருஷ்யா வகுத்தபாதையிலோ, சீனவகுத்த

பாதையிலோ, நாம் நடந்து செல்ல வேண்டும் என்ற அவசியமில்லை; நமக்கென்று ஒரு தனிப் பாதையை நாமே போட்டுக் கொள்வோம் என்றார் நேரு. அதுவும் சரி, என்றது ஆவடி காங்கிரஸ். ஒருவர் கூட இவற்றை எதிர்க்கவில்லை. முணுமுணுப்புக்கூடக் கிடையாது. என்?

## வேறுவழி இல்லை

ஆவடி காங்கிரஸ் செய்தது சரியா? சரி தான்; வேறுவழி இல்லை! இந்தியாவின் எதிர்காலத்தை நேருவிடம் இன்று நாம் ஒப்படைக்காவிட்டால், இமயம் முதல் குமரிமுனை வரையில் தோன்றியுள்ள சில அகில இந்திய கள்ள மார்க்கெட் கோடீசுவரர்கள் ஒன்று சேர்ந்து, இந்தியாவைத் தங்களுடையபையில் ஒளித்து வைத்துக் கொண்டு சிலடாலர்களுக்காக நம்மை விலை கூறி விடுவார்கள். தப்பினோம்! பிழைத்தோம்! இந்நாட்டின் அரசாங்கத்தை நடத்தும் வேலையைக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டதுதான் தாமதம். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அவர்களுடன் ஒட்டிக்கொண்டு காங்கிரசை எதிர்த்தவர்களும், காங்கிரசைப் பரிகசித்தவர்களும், காங்கிரசைக் காட்டிக் கொடுத்துத் துன்புறுத்தியவர்களும் உடனே காங்கிரசில் சேர்ந்து கொண்டு, பணத்தின் வலிமையால், அரசாங்கத்தில் பல கேந்திரஸ்தானங்களைப் பிடித்துக் கொண்டனர். கள்ளமார்க்கெட் பிரபுக்களில், கதர் ஆடை அணியாத பிரபுவைக் காண்பது அரிதாயிற்று. தூங்கும் சிங்கத்தின் உடலில் பல பேன்களும் மூட்டைப் பூச்சிகளும் ஒட்டிக் கொண்டன. இச்சிங்கத்தின் தூக்கம் ஆவடியில்தான் கலைந்தது. சோம்பல் முறித்து மயிர்சிலிர்க்கும் இச்சிங்கத்தின் உடலிலிருந்து அப்பூச்சிகள் ஆவடியில்தான் உதிர ஆரம்பித்தன!

## எதிர்காலம்

சுதந்திர இந்தியாவின் லட்சியம் என்னவென்று நிர்ணயம் செய்தாகிவிட்டது. இனி பின் நோக்குவதற்கில்லை. "சோஷலிஸ" பாணியில் நமது சமூகம் அமைக்கப்படும். அதாவது எந்தத்துறையிலும் மக்களிடம் அதிக ஏற்றத்தாழ்வு இல்லாத ஒரு "சமதர்ம சமுதாயம்" தான் இந்தியாவின் லட்சியமாகும். ஆனால் இந்த லட்சியத்தை அடையும் பாதை எங்கே?

"சோஷலிஸ"ப்பாதையை அமைக்கும் கருவிகள் நமது சட்டங்கள்தான்.

சுதந்திர "சோஷலிஸ" இந்தியாவில், இனி தான் புரட்சிகரமான சட்ட திட்டங்கள் வந்து குவியப் போகின்றன. இதுவரையில் சட்ட சபைகளிலும் நீதி மன்றங்களிலும் வக்கீல் சங்கங்களிலும் உலவிக் கொண்டிருந்த சட்டங்களின் தன்மை வேறு. இனி வரப்போகும் சட்டங்களின் போக்கே வேறாக இருக்கும். இதுவரை சட்டங்களெல்லாம் ஒரு காவலாளரைப் போலவே உங்களுடைய உடலையும், உயிரையும், உங்களுடைய சொத்து சுதந்தரங்களையும், உங்களுடைய வீடு வாசல்களையும், உங்களுடைய நிலபுலன்களையும் காவல் காத்து வந்தன. உங்களிடம் குவிந்திருக்கும் சொத்துக்களெல்லாம் உங்களுக்கு எப்படிக் கிடைத்ததென்பதைப் பற்றியோ, அச் சொத்துக்களை நீங்கள் எப்படி உபயோகப்படுத்துகின்றீர்கள் என்பதைப் பற்றியோ, இக்காவலாளர் (சட்டங்கள்) இது வரை கவனிக்கவில்லை. ஆனால் பாரத மக்களின் சமதர்ம நல்வாழ்வையே லட்சியமாகக் கொண்ட சுதந்தர இந்தியாவில் இனி வரப் போகும் சட்ட திட்டங்கள் எல்லாம், உங்களுடைய வாழ்க்கையில், உங்களுடைய அன்றன்றாடச் செய்கையில், உங்களுடைய, குடும்ப யோக க்ஷேமத்தில், உங்களுடைய சொத்து சுதந்தரங்களில், நேரிடையாகக் கூச்சமில்லாமல் குறுக்கிடும். உங்களுடைய இச்சொந்த விஷயங்களிலெல்லாம், இனி நமது அரசாங்கமும் சட்ட சபைகளும் மிகக் கவலை கொண்டு அதிவிரைவாக அதற்கான சட்டங்களையே இயற்றும். எல்லாம் உங்களுடைய "நல் வாழ்வு"க்காகவே. நீங்கள் மட்டிலா இப்பாரத நாட்டில் தனிமையில் வசிக்கின்றீர்கள்? உங்களுடன் அரைப் பட்டினி கால் பட்டினியாக இந்நாட்டில் வசித்து வரும் முப்பத்தாறு கோடி மக்களின் நல்வாழ்வுடன் தான் இனி உங்களுடைய நல் வாழ்வும் இணைந்து நிற்கும். பாரத மக்களின் எதிர்கால நல் வாழ்வானது, இனி, உங்களுடைய தர்ம சிந்தனையிலோ, பெருந்தன்மையிலோ, நம்பிக்கை வைத்து ஓடாது. நீங்கள் இஷ்டப் பட்டாலும், படாவிட்டாலும், உங்களுடைய தேவைக்கு மேல் அதிக

மாக உங்களிடம் இருக்கும் சொத்துக்களை, வருங்காலச் சட்டங்கள், கொஞ்சம் கொஞ்சமாக உங்களிடமிருந்து எடுத்து உங்களைச் சுற்றி நிற்கும் எளிய மக்களிடம் பகிர்ந்து கொடுத்து, "சமுதாய சம தர்மத்தை" நிலைநாட்டும். இதுதான் "சோஷலிஸம்" இது உங்களுடைய அதிர்ஷ்டமே! இதே சூழ் நிலையில், திருமகளின் செல்வப் புதல்வர்களாகிய நீங்கள் வேறு எந்த நாட்டில் வசித்து வந்தாலும், லட்சிய வாதிகள் உங்கள் வீட்டிற்குள் புகுந்து சூறையாடுவார்கள்; உங்களுடைய உடலுக்கும் உயிருக்குமே ஆபத்தை உண்டாக்குவார்கள்; உங்களை மக்களின் விரோதிகளாகப் பறை சாற்றுவார்கள்! ஆனால் இப்புண்ணிய பூமியில் வசிக்கும் நீங்கள் அதற்குப் பயப்படவேண்டியதில்லை. அயல்நாடுகளில் துப்பாக்கிரவைகளும் கூரிய கத்தி முனைகளும் செய்த அதே வேலையைத் தான் பாரத நாட்டின் இதோ வந்துகொண்டிருக்கும் சட்டங்கள் செவ்வனே செய்து முடிக்கப்போகின்றன. இதுதான் காங்கிரஸ் போடும் புதிய பாதையாகும். ஆனால் நீங்கள் ஆயாசப்படமாட்டீர்கள். உங்களிடமிருக்கும் அதிகப் பட்ட சொத்துக்கள் மறைவதை நீங்கள் உணரமாட்டீர்கள். இவ்வேலையை நாசூக்காகவும் நீங்கள் அதிக மன அதிர்ச்சியை அடையா வண்ணமும் செய்யப் போவன நமது வருங்காலச் சட்டங்களே! இது வரை உங்களுடைய சொத்துக்களை வேறு ஒருவரும் தொடாமல் குவியும் வண்ணம் பாதுகாத்து வந்த அதே காவலாளரே, உங்கள் வீட்டிற்குள் தாமே புகுந்து அக்குவியல்களை வெளியேற்றி, அதோ நிற்கும் எளிய மக்களிடம் பகிர்ந்து கொடுப்பார்! இக்காவலாளரை (சட்டங்களை) எதிர்க்காதீர்கள்! உங்களை விட மிக மிகப் பலமுடையவர் உங்கள் காவலாளர்! உங்களால் இதைத் தடுக்க முடியாவிட்டாலும், இவை எல்லாம் எப்பொழுது நடக்கும், எப்படி நடக்கும், யார் நடத்துவாகள் என்ற விஷயங்கள் அடங்கிய நமது வருங்காலச் சட்ட திட்டங்களை எல்லாம் நீங்கள் முதலில் பெரும்படியாகவும், பிறகு நுட்பமாகவும் கவனித்து வர "வக்கீல்" உங்களுக்குத் தன்னால் இயன்ற உதவி புரியும். வாழிய பாரதமக்கள்!

## புத்தாண்டு வாழ்த்துக்கள்!

1955-ஆம் ஆண்டு பிறந்து விட்டது. "வக்கீல்" அன்பர்களுக்கு எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்! அத்துடன் பொங்கல் முதலிய வாழ்த்துக்களும்!

பாரதநாட்டில் வசிக்கும் நமக்கு ஒரே பன்னிரண்டு மாதங்களுக்குள் பல பல புது ஆண்டுகள் ஆரம்பமாகின்றன. ஐரோப்பிய கலாசாரம் இந்தியாவில் புகுந்த பிறகு, நாமும் வெளிப்படையான காரியங்களுக்குக் கிறிஸ்துவ வருடத்தையும் மாதங்களையும் தான் பின்பற்றி வருகிறோம். ஆனால் ஜனவரி மாதம் முடிவதற்குள்ளாகவே தமிழ் மக்களாகிய நமக்குப் பல சிநேகிதர்களிடமிருந்தும் முக்கியமாக வியாபார உலகிலிருந்தும் "பொங்கல்" வாழ்த்துக்கள் வந்து குவிந்து விட்டன. உடனடியாக ஏப்ரல் மாதம் முதல் தேதியன்று சர்க்காரின் 'நிதி' வருடம் பிறந்து விடும். வருமான வரி உத்தியோகஸ்தர்களுக்கும் விற்பனை வரி, வியாபார வரி உத்தியோகஸ்தர்களுக்கும் இது தான் வருடப்பிறப்பு. ஏப்ரல் மாதம் முடிவதற்குள் தமிழகம் புதிய தமிழ் வருடத்தையே வரவேற்கும். நமது கம்யூனிஸ்டு அன்பர்களுக்கும் தஞ்சைச் சட்டத்தில் சிக்கிக் கொண்ட விவசாயிகளுக்கும் மே மாதம் முதல்தேதி தான் புதிய வருடம் பிறக்கும். ரிவின்யூ போர்டு முதல் தாசில்தார், ரிவின்யூஇன்ஸ்பெக்டர் கிராம பெரிய தனக்காரர் கர்ணிகர்கள் உள்ளிட்ட ரிவின்யூ டிபார்ட் மெண்டார் அனைவர்களுக்கும் புதிய பசலி ஆரம்பமாகும் ஜூலை முதல் தேதி தான் வருடப் பிறப்பாகும். பலரகப் பட்ட "வக்கீல்" நேயர்களும், ஒவ்வொரு புது ஆண்டுக்கும் இதையே எமது புத்தாண்டு வாழ்த்தாக அங்கீகரிப்பார்களாக!

## ஏழுவயது.

"வக்கீல்" பத்திரிகைக்கு ஆறுவயது நிரம்பி இவ்வருடத்தில் ஏழாவது வயது பிறக்கின்றது. ஏழுவயதை எட்டிப்பிடிக்கும் குழந்தைகள் கொஞ்சம் பலசாலிகளாகத்தான் இருக்கவேண்டும். அதுவும் பத்திரிகை உலகில் குழந்தை நோய் என்பது மிக அதிகம். "வக்கீல்" பத்திரிகையின் வளர்ச்சிக்குக் காரணம் அதன் இயற்கைப்

பலம் மட்டுமல்ல. அதற்கு உணவு ஊட்டி, இதுவரை அதை அளவு கடந்த அபிமானத்துடன் வளர்த்து வந்த "வக்கீல்" வாசகர்களும் விளம்பரதார்களும் ஏஜண்டுகளுமாகிய உங்களுக்கே "வக்கீலி"ன் நன்றி உரியதாகும். "வக்கீலில்" உள்ள எவ்வளவோ குற்றம் குறைகளை நீங்கள் மன்னித்திருக்கின்றீர்கள்! "வக்கீலில்" வரும் விஷயத்தை மட்டில் நீங்கள் கவனித்து, அதன் அழகின்மை, அச்சுப் பிழை, தாமதத் தோற்றம், போன்ற பல குறைபாடுகளை நீங்கள் பொருட் படுத்தாது இருந்திருக்கிறீர்கள். "வக்கீல்" இந்நன்றியை என்றும் மறவாது! "வக்கீல்" தன் வளர்ச்சியில் அடுத்த படியில் ஏறும் தருவாயில் இருக்கின்றது. இதுகாறும் மாத இதழ்களாக வெளிவந்த "வக்கீல்" இவ்வருடத்திற்குள், மாதம் இரண்டு முறையாகவும் பின்பு வார இதழாகவும் தோற்றமளிக்கத் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது. இது அவசியமா? புரட்சியைச் சட்ட திட்டங்களின் மூலம் உருவாக்கப்போகும் எதிர்காலத்தில் இது அவசியமென்றே நினைக்கிறோம். உங்களுடைய அபிப்பிராயம் என்ன?

---

## "வக்கீல்" 1954 - இதழ் 12.

1954 ஆம் வருடத்திய 11 ஆவது இதழ் (நவம்பர்—டிசம்பர் இதழ்) பிரசுரமான பிறகு 1955- இதழ் 1 ஆகிய இந்த இதழ் பிரசுரமாகி இருக்கின்றது. 1954 இதழ் 12 என்பது இன்னும் பிரசுரமாகவில்லை. இவ்விதழில் 1954ஆம் வருட "வக்கீல்" பொருள் அட்டவணை இருப்பதுடன், ஸ்டாம்பு, ரிஜிஸ்டர் கட்டணம் போன்ற சில உபயோகமுள்ள அட்டவணைகளும் சேர்க்க உத்தேசித்திருக்கிறோம். "வக்கீல்' இதழ்களை ஒவ்வொரு வருடமும் பைண்டு செய்து புத்தகமாக வைத்துக்கொள்ளவே, இவ்விதழ் பிரசுரம்செய்யப்படும். இந்த இதழ் அதாவது '1954- இதழ் 12' என்பது பிரசுரமானவுடன் 1954ஆம்வருடத்தில் டிசம்பர் மாதத்தில் வருடச் சந்தா உள்ளவர்களுக்கு மட்டில் தான் நேரிடையாகத் தபால் மூலம் அனுப்பப்படும். இந்த இதழ் ஏஜண்டுகளுக்கு அனுப்பப்படமாட்டாது. வருடச் சந்தா இல்லாதவர்களுக்கு இத்தனி இதழின் விலை அணு 8. இனி ஒவ்வொரு வருடத்திலும் கடைசி இதழ் இவ்விதமே பிரசுரம் செய்யப்படும்.

# புதிய சட்டங்கள்

சுருக்கமும் - வரிசையாகவும்

## 1954-ஆம் வருடத்திய சென்னைச் சட்டங்கள்

[சென்னைச் சட்ட மன்றத்தாரால் நிறைவேற்றப்பட்டவை. சட்டம் சென்னைச் சர்க்கார் கெஜட்டின் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகக் சொல்லப்பட்டிருக்கின்றன.]

24. சங்கப் பதிவுச்சட்டத் திருத்தம்.

Societies Registration (Madras Amendment) Act. 1954. (1-9-1954) சங்கங்களைப் பதிவு செய்யும் அதிகாரி இதுவரையில் கம்பெனி ரிஜிஸ்ட்ராராக இருந்தார். இனி சங்கங்களைப் பதிவு செய்யும் தலைமை அதிகாரி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் ரிஜிஸ்ட்ரேஷன் என்ற அதிகாரியாவார். இரண்டு பதவிகளையும் ஒருவரே வகித்து வந்தாலும், கம்பெனி ரிஜிஸ்ட்ரார் என்ற ஹோதாவில் அவ்வதிகாரி மத்திய சர்க்காருக்கு உட்பட்டவராவர். இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் ரிஜிஸ்ட்ரேஷன் என்ற ஹோதாவில் அவர் சென்னை ராஜ்ய சர்க்காருக்கு உட்பட்டவராவார். சங்கங்களைப் பதிவு செய்து கொள்ளும் அதிகாரம் ராஜ்யங்களுக்கே இருப்பதால் இத்திருத்தம் ஏற்பட்டிருக்கிறது.

25. பவானிஸாகர் நகர அமைப்புச் சட்டம்.

Bhavanisagar Town Ship Act 1954. (8-9-1954) கோயமுத்தூர் ஜில்லாவில் இருக்கும் பவானிஸாகர் என்ற இடத்தின் ஸ்தல நிர்வாகத்திற்காக ஒரு தனி கமிட்டியை ஸ்தாபிக்கும் சட்டம்.

26. சென்னை வியாபார விளைபொருள் மார்க்கெட் சட்டத் திருத்தம்.

Madras Commercial Crops Markets Amendment Aet 1954. (15-9-1954) இச் சட்டப்படி யார்யாருக்கு லைசென்சு கொடுக்கக் கலெக்டர் மறுக்கலாமென்பதைப்பற்றி செக்ஷன் 5. திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது.

# சென்னை நாடகச் சட்டம் (1954)

[Madras Dramatic Performances Act 1954—சென்னைச் சட்ட மன்றத்தால் இயற்றப் பட்ட 1954ஆம் வருடத்திய 33-ஆவது சென்னைச் சட்டம். 1-1-55-ல் கவர்னர் அவர்களின் அங்கீகாரம் பெற்று 12-1-1955 தேதி சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.]

## அமுலில் இருக்கும் இடங்கள்

இச்சட்டம் சென்னை ராஜ்யம் பூராவிலும் அமுலில் இருக்கும். இச்சட்டமானது சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரமான தேதியாகிய 12-1-1955 முதல் அமுலுக்கு வந்து விட்டது. நாடகங்களைப் பற்றிய ஒரு பழைய மத்தியச் சட்டம் இருந்தது. 1876 ஆம் வருடத்திய 19 ஆவது மத்தியச் சட்டமாகிய அச்சட்டம், சென்னை ராஜ்யம் சம்பந்தப் பட்ட வரையில் இப்புதுச் சட்டத்தால் ரத்து செய்யப்பட்டுள்ளது.

## ஆட்சேபகரமான நாடகங்கள், ஆட்டங்கள் அல்லது அபிநயங்கள் எவை?

ஆட்சேபகரமான நாடகங்கள் முதலிய நிகழ்ச்சிகளைத் தடுக்க இச்சட்டம் ராஜ்ய சர்க்காருக்கு ஒரு அதிகாரத்தைக் கொடுப்பதால் "ஆட்சேபகரமான நிகழ்ச்சி" (Objectionable Performances) என்றால் எவை என்பதைப் பற்றி இச்சட்டத்திலேயே வியக்தமாக விளக்கம் செய்யப்பட்டிருக்கிறது. (செக்ஷன் 2. (1) ஆடலோ, அபிநயமோ அல்லது வேறு நாடகமோ, அடியில் கண்டபடி இருந்தால் அவை ஆட்சேபகரமானவையாகும். அதாவது:-

(1) இந்தியாவிலோ அல்லது அதில் அடங்கிய எந்த ராஜ்யத்திலோ சட்டபூர்வமாக ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் அரசாங்கத்தையோ, அல்லது ஒரு பிரதேசத்தில் அதற்குள்ள அதிகாரத்தையோ, கவிழ்த்துவிடுவதற்காகவோ, அல்லது வேரறுத்துவிடவோ, பலாத்காரத்தை அல்லது நாசவேலையைச் செய்யும்படி தூண்டும் நிகழ்ச்சிகள் (2) கொலை, நாசவேலைகள், அல்லது பலாத்காரத்துடன் கூடிய குற்றங்களைச் செய்யும்படி ஒருவரைத் தூண்டக்கூடிய நிகழ்ச்சிகள் (3) சேனைப்படை அல்லது போலீஸ் படையைச் சேர்ந்தவர்களை அவர்களுடைய அரசாங்க விசுவாசத்தினின்றோ, அவர்களுடைய கடமையினின்றோ பிறழும்படி செய்யக்கூடிய நிகழ்ச்சிகளும்; அவ்விதப் படைகளுக்கு ஆள் திரட்டுவதைப் பாதிக்கக்கூடிய நிகழ்ச்சிகளும்; அல்லது அவ்விதப் படைகளின் ஒழுக்கத்தைப் பாதிக்கக் கூடிய நிகழ்ச்சிகளும் (4) இந்தியப் பிரஜைகளுள் ஒரு பிரிவினருக்கு எதிராகப் பலாத்கார நடவடிக்கைகளில் ஈடுபடும்படி வேறு ஒரு பிரிவினரைத் தூண்டக்கூடிய நிகழ்ச்சிகள் (5) இந்தியப் பிரஜைகளுள் ஒரு வகுப்பினருடைய மதத்தையோ, மத நம்பிக்கைகளையோ தூஷிப்பதன் மூலமாகவோ அல்லது அவமதிப்பதின் மூலமாகவோ அவர்களுடைய மத உணர்ச்சிகளை வேண்டுமென்று புண்படுத்தக் கூடிய நிகழ்ச்சிகளும் (6) மிக அநாகரிகமான நிகழ்ச்சிகள்; தூஷணைகள் அல்லது ஆபாசங்கள் அடங்கிய நிகழ்ச்சிகள்; தூஷணை அல்லது அவதூறு மூலம் பயமுறுத்திப் பணம் சம்பாதிக்கும் எண்ணத்துடன் நடத்தப்படும் நிகழ்ச்சிகள் இவைகள் தான் "ஆட்சேபகரமான நிகழ்ச்சிக"ளாகும். ஆனால் ஒரு சட்டத்தையோ சர்க்காரின் நடவடிக்கைகளையோ சட்டபூர்வமான வழியில் மாற்றுவதற்காகவோ, அல்லது பரிகாரம் அடைவதற்காகவோ அச்சட்டத்தைப் பற்றியோ, சர்க்கார் நடவடிக்கைப் பற்றியோ கண்டனம் செய்யும் முறையிலோ, அல்லது தவறை வெளிப்படுத்தும் முறையிலோ ஒரு நிகழ்ச்சியில் பேசுவதும் நடிப்பதும் "ஆட்சேபகரமாக" கருதப்பட மாட்டா. மேலும் ஒரு நாடகமோ அல்லது வேறு நிகழ்ச்சியோ, ஆட்சேபகரமானதா அல்லவா என்பதை அந்நாடகம் அல்லது நிகழ்ச்சியை முற்றிலும் மொத்தமாகக் கவனித்து நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

## "பொது இடம்"

"பொது இடம்" (Public Place) என்பது ஒரு நாடகம் அல்லது நிகழ்ச்சியைப் பார்ப்பதற்காகப் பொதுமக்கள் அனுமதிக்கப்படும் கட்டடங்கள், வளவுகள், அல்லது பக்கங்களில் அடைக்கப்படாத திறந்த வெளிகள் பந்தல்கள் இவைகளைக் குறிக்கும்.

## ஆட்சேபகரமான நிகழ்ச்சிகளை தடுக்கச் சர்க்காரின் அதிகாரம்.

ஒரு பொது இடத்தில் நடத்தப்படப்போகிற எந்த நாடகமோ, ஆடலோ, அபிநயமோ "ஆட்சேபகரமானது" என்று ராஜ்ய சர்க்காருக்குத் திருப்திகரமாகத் தெரிந்தால் அதைத் தடுத்து விட ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. எந்தக் காரணங்களினால் அந்நிகழ்ச்சியை, ஆட்சேபகரமானதென்று சர்க்கார் நினைக்கின்றனரோ அக்காரணங்களைக் கண்டு ஒரு உத்தரவு போட்டு அதன் மூலம் அந்நிகழ்ச்சி தடுக்கப்படும். ஆனால் இவ்விதத்தடை உத்தரவு போடப்படுவதற்கு முன்பு, அந்நிகழ்ச்சியை

ஏற்பாடு செய்தவர்களுக்கோ, அல்லது அந்நிகழ்ச்சியைநடத்துவதில் முக்கியமாகப்பொறுப்பு எடுத்துக்கொண்டிருப்பவர்களுக்கோ, அல்லது அந்நிகழ்ச்சியை நடத்தும் பொது இடத்தின் சொந்தக்காரருக்கோ அல்லது அந்த இடம் யாருடைய சுவாதீனத்தில் இருக்கிறதோ அவர்களுக்கோ தெரிவித்து, சர்க்கார் உத்தேசித்திருக்கும் தடை உத்தரவை ஏன் போடக்கூடாதென்பதற்குக் காரணங்காட்ட அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளித்த பிறகேதான் மேற்கண்டபடி சர்க்கார் தடை உத்தரவு போடவேண்டும். மேலும் இந்த ஷரத்தின்படி சர்க்கார் போடும் தடை உத்தரவுகள் சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்படவேண்டும். இத்தடை உத்தரவு பிரகடனம் செய்யப்படலாம். இவ்வுத்தரவுபற்றி அறிவிப்பை எழுதியோ, அச்சடித்தோ, தடைப்பட்ட அந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள உத்தேசித்திருப்பவர்களுக்குத் தகவல் தெரிவிக்கும்விதம் எந்த இடத்திலும் ஒட்டி வைக்கப்படலாம். (செக்ஷன் 3.)

## தாற்காலிகத் தடைசெய்யப் போலீஸ் கமிஷனருக்கும் ஜில்லா கலெக்டருக்கும் அதிகாரம் உண்டு.

சென்னைமாநகரில் போலீஸ் கமிஷனருக்கும், மற்ற இடங்களில் ஜில்லா கலெக்டர்களுக்கும் ஒரு விசேஷ அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது ஆட்சேபகரமான ஒரு நாடகமோ நிகழ்ச்சியோ, அது நடந்து கொண்டிருந்தாலும் சரி, அல்லது நடத்தப்படும் தறுவாயில் இருந்தாலும் சரி, அதனால் அமைதிக்குலைவு ஏற்படக்கூடுமென இவ்வதிகாரிகளுக்குத் தோன்றினால், இவர்கள் அந்நிகழ்ச்சி அல்லது நாடகத்தை நடக்காமல் தடை செய்யலாம். தடை உத்தரவில், தடைசெய்யப் படுவதற்கான காரணங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும். இவ்வுத்தரவால் பாதிக்கப்படும் நபர்கள் மனுச் செய்து கொள்வதின் பேரில் தம்மால் போடப்பட்ட தடை உத்தரவைப் புனராலோசனை செய்யவும் இவ்வதிகாரிகளுக்கு அதிகாரம் உண்டு. இத்தடை உத்தரவு (மத்தியில் கோர்ட்டால் ரத்துச் செய்யப்படாவிட்டால்) இரண்டு மாதங்களுக்குத்தான் செல்லும். ஆனால் மறுபடியும் அவசியமிருந்தால் இத்தடையை ஒரு தடவையில் இரண்டுமாதங்களுக்கு அதிகப்படாத காலத்திற்கு நீடித்துக் கொண்டே போகவும் இவர்களுக்கு அதிகாரம் உண்டு. (செக்ஷன் 4.)

சர்க்காரால் செய்யப்படும் தடை உத்தரவுகளின் நகல்களும் சரி, போலீஸ் கமிஷனர் அல்லது ஜில்லா கலெக்டர் செய்யவும் தாற்காலிகத் தடை உத்தரவுகளும் சரி, நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்களுக்கோ, அதில் பங்கு எடுத்துக் கொள்ளும் முக்கியஸ்தர்களுக்கோ, அல்லது இடத்தின் சொந்தக்காரருக்கோ அல்லது சுவாதீனம் வைத்திருப்பவருக்கோ நேரிடையாகக் கொடுக்கப்படலாம்; அல்லது விதிகளில் கண்ட முறைப்படி அவர்களுக்குத் தெரிவிக்கப்படலாம். (செக்ஷன் 5.)

## தடை உத்தரவை மீறினால் 3 மாதம் சிறை, ரூ. 1000 அபராதம் விதிக்கப்படலாம்.

சர்க்காரால் போடப்படும் தடை உத்தரவையோ, போலீஸ் கமிஷனர் அல்லது ஜில்லா கலெக்டரால் போடப்படும் தாற்காலிகத் தடை உத்தரவுகளையோ நகல் பெற்றுக்கொண்டு அவற்றை மீறி நடப்பவர்களும், மீறி நடப்பதை இஷ்டப்பட்டு அனுமதிப்பவர்களும் குற்றம் செய்பவர்களாவார்கள். இக்குற்றத்திற்கு 3 மாதம் வரை சிறைத் தண்டனையோ, அல்லது ரூ. 1000 வரை அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப் படலாம். (செக்ஷன் 6) சர்க்காரால் பிறப்பிக்கப்படும் தடை உத்தரவு பிரசுரம் செய்யப்பட்ட பிறகோ, அல்லது போலீஸ் கமிஷனராலோ ஜில்லா கலெக்டராலோ போடப்பட்ட தடை உத்தரவு அமுலில் இருக்கும் காலத்திலோ, தடைப்பட்ட நிகழ்ச்சியையோ அல்லது விஷயத்தில் அதைப்போலவே ஒத்திருக்கும் நிகழ்ச்சியையோ, ஏற்பாடு செய்பவர்களும், நடத்துபவர்களும், தடை விஷயம் தெரிந்து அதில் பங்கொடுத்துக் கொள்பவர்களும் குற்றம் செய்பவராவார்கள். இக்குற்றத்திற்கும் 3 மாதம் வரை சிறைத் தண்டனையோ அல்லது ரூ. 1000 வரை அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படலாம். தடைப்பட்ட நிகழ்ச்சி நடக்கும் இடத்தின் சொந்தக்காரர்களும், சுவாதீனம் வைத்திருப்பவர்களும், அங்கே தடைப்பட்ட நிகழ்ச்சி நடப்பதற்காக இடத்தைத் திறந்து விட்டாலும், வைத்திருந்தாலும், உபயோகப்படுத்தினாலும் அவர்களும் குற்றம் செய்பவர்களாவார்கள், அதே போலவே தண்டனை உண்டு.

## அதிகாரிகள் தகவல் கேட்டால் கொடுக்கவேண்டும்.

ஒரு நாடகமோ நிகழ்ச்சியோ ஆட்சேபகரமானதா அல்லவா என்று தெரிந்து கொள்ளும் பொருட்டு அதைப்பற்றிய விவரங்களையும் தன்மையையும் தெரிவிக்கும்படி கேட்டு உத்தரவு பிறப்பிக்க ராஜ்ய சர்க்காருக்கும், இதற்காகச் சர்க்காரிடம் அதிகாரம் பெற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் அதிகாரமுண்டு. இத்தகவலைக் கொடுக்கும்படி நிகழ்ச்சி ஏற்பாடுசெய்பவர்களையும், நடத்தப் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பவர்

களையும், அதில் கலந்து கொள்ளுபவர்களையும், இடத்தின் சொந்தக்காரர்களையும், இடத்தைச் சுவாதீனம் வைத்திருப்பவர்களையும் கேட்கலாம். நாடகம் அல்லது நிகழ்ச்சியின் ஆசிரியரையும், உரிமையாளரையும், அச்சடித்தவர்களையும்கூட தகவல் கேட்கலாம். தகவல் கேட்கப்பட்டவர்கள், உத்தரவில்கண்ட கெடுவுக்குள், தங்களுக்குத் தெரிந்தவரையில் தகவல் கொடுக்காமலிருப்பதும் குற்றமாகும். இது இந்தியன் பீனல் கோடு என்ற குற்றங்களைக் குறித்த சட்டத்தின் 176ஆவது செக்ஷன்படி குற்றமாகக் கருதப்படும். இதற்கு 6 மாதம் வரை சிறைத் தண்டனையோ, ரூ. 1000 வரை அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படலாம். (செக்ஷன் 8.)

## நாடகம் முதலியவற்றின் நகலைக் கேட்கலாம்

ஒரு ஆட்சேபகரமான நாடகமோ நிகழ்ச்சியோ ஒரு பொது இடத்தில் நடக்கும் தறுவாயில் இருப்பதாக, சர்க்காருக்கோ அல்லது போலீஸ் கமிஷனருக்கோ அல்லது ஜில்லா கலெக்டருக்கோ தோன்றினால், அந்நாடகம் அல்லது நிகழ்ச்சியின் நகல் ஒன்றைத் தங்களுக்கு நிகழ்ச்சி நடப்பதற்குக் குறைந்தது எழு நாட்கள் முன்னதாகவே அனுப்பவேண்டுமென்றும் அப்படி அனுப்பாமல் நிகழ்ச்சியைக்குறிப்பிட்ட எல்லைக்குள் நடத்தக்கூடாதென்றும் இவர்கள் தடை உத்தரவு விதிக்கலாம். இவ்வுத்தரவின் நகல் நிகழ்ச்சி நடக்கும் இடத்தின் சொந்தக்காரரிடமோ அல்லது இடத்தைச் சுவாதீனம் வைத்திருப்பவரிடமோ கொடுக்கப்படலாம். இவ்வுத்தரவுப்படி நடக்காமல் நிகழ்ச்சியை இவர்கள் நடத்துவதும் நடக்க அனுமதிப்பதும் குற்றமாகும். இக்குற்றத்திற்கும் 3 மாதம் வரை சிறைத் தண்டனையோ, அல்லது ரூ. 1000 வரை அபராதமோ, அல்லது இரண்டுமோ, விதிக்கப்படலாம். (செக்ஷன் 9)

## ஹைகோர்ட்டுக்கு அப்பீல் உண்டு

ராஜ்யசர்க்காரால் இச்சட்டத்தின் செக்ஷன் 3 (1) ஷரத்தின்படி போடப்படும் தடை உத்தரவுகளின் மீதும்; போலீஸ் கமிஷனராலோ செக்ஷன் 4. ஷரத்தின்படி போடப்படும் தாற்காலிகத் தடை உத்தரவுகளின் மீதும் 60 நாட்களுக்குள், இவ்வுத்தரவுகளால் பாதிக்கப்பட்டவர் எவரும், சென்னை ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொள்ளலாம். அப்பீலைக் குறைந்தது இரண்டு உயர் நீதிபதிகளாவது சேர்ந்து விசாரிப்பார்கள். இவ்வுத்தரவுகளை உறுதிசெய்யவும், மாற்றவும், ரத்துச் செய்யவும், இது சம்பந்தமாக வேறு யுக்தமான உத்தரவுகள் செய்யவும் ஹைகோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு.
(செக்ஷன் 10.)

187736.
சென்னை

## வேறு சட்டங்களும் அப்படியே இருக்கும்

இச்சட்டப்படி ஏதொரு தடை உத்தரவும் போடப்படாவிட்டாலும், இந்தியன் பீனல்கோடு என்ற குற்றச் சட்டத்தின்படியோ, வேறு சட்டங்களின்படியோ, நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுவதை இச்சட்ட ஷரத்துக்கள் பாதிக்கமாட்டா. (செக்ஷன் 11)

## அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு

இச் சட்டப்படிக்கோ, விதிகளின்படிக்கோ, நல்லெண்ணத்துடன் ஒரு அதிகாரியோ உத்தியோகஸ்தரோ எடுத்துக்கொள்ளும் எந்த நடவடிக்கையைப் பொறுத்தும் அவர் மீது எவரும் எவ்வித தாவாவும், கிரிமினல் வழக்கும், மற்ற நடவடிக்கைகளும் நடத்த முடியாது.
(செக்ஷன் 12)

## விதிகள்

இச்சட்டத்தை அமுல் நடத்தச் சர்க்கார் விதிகள் இயற்றுவார்கள். இவை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்படும். மேலும் சட்ட சபைகள் கூடியவுடன் அச்சபைகளுக்குச் சமர்ப்பிக்கப்படும். (செக்ஷன் 13)

## பழைய சட்டம் ரத்து

1876ஆம் வருடத்திய 16ஆவது மத்திய சட்டமாகிய நாடகச் சட்டம் சென்னை ராஜ்யம் சம்பந்தப்பட்ட வரையில் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. (செக்ஷன் 14.)

மூர்த்தி ஸ்டோர்
செம்பனார்கோவில்
(மாயூரம் தாலுக்கா)
எங்களிடம் புது சைகிள்களும், சைகிள் சாமான்கள், பெட்ரோமாக்ஸ் லைட் சாமான்கள், தையல் மிஷின் சாமான்கள் & கிராமபோன் சாமான்களும் விலை நயமாய் கிடைக்கும்.
சைகிள்களின் எல்லாவிதமான ரிப்பேர்களும் செய்யப்படும்.
உரிமையாளர்,
T. N. ராமமூர்த்தி.

# விதிகள்

## விசேஷ விவாகச் சட்ட விதிகள் (1954)

I—1—1955 முதல் அமுலுக்கு வந்துள்ள விசேஷ விவாகச் சட்டம் (Special Marriage Act) என்ற 1954ஆம் வருடத்திய 43ஆவது மத்தியச் சட்டத்தில் கண்ட அதிகாரங்களை உபயோகித்து அச்சட்டத்தை அமுல் நடத்துவதற்கான விதிகளைச் சென்னைச்சர்க்கார் இயற்றி இருக்கின்றனர். (விசேஷ விவாகச் சட்டம் முழுமையும் "வக்கீல்" 1954—இதழ் 11-ல் விளக்கப்பட்டிருக்கிறது.) விசேஷ விவாகச் சட்டச் சென்னை விதிகள் 31—12—1954 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட் பாகம் I விசேஷ வெளியீட்டில் பிரசுரமாகி இருக்கின்றன.

ஜில்லா திருமண அதிகாரி (Marriage Officer) என்பவர் அந்தந்த இடத்திற்கு அதிகாரமுள்ள ஜில்லா ரிஜிஸ்டிரார் தான். விசேஷ விவாகச் சட்டப்படி திருமணம் செய்து கொள்ள விரும்பும் மணமகனும் மணமகளும் இருவரும் சட்டத்தின் இரண்டாவது ஷெடியூலில் கண்ட நமூனாப்படி ஒரு நோட்டீஸ் எழுதி, அதில் இருவரும் கையெழுத்துப் போட்டு அந் நோட்டீசைத் திருமண அதிகாரிக்கு (அதாவது ஜில்லா ரிஜிஸ்ட்ராருக்கு) ரிஜிஸ்டர் தபால் மூலம் அனுப்பினாலும் அனுப்பலாம்; அல்லது நேரில் கொடுத்தாலும் கொடுக்கலாம். இந்த நோட்டீசுடன் கட்டணம் ரூ 3. செலுத்த வேண்டும். நோட்டீசைத் திருமண அதிகாரியிடம் நேரில் கொடுத்தால் இக்கட்டணம் ரூ 3-யும் அவரிடமே நேரில் கட்டி ரசீது வாங்கிக் கொள்ளலாம். அப்படி இல்லாவிட்டால் ரூ3-ஐ அந்த அதிகாரிக்கு மணியார்டர் செய்து, மணியார்டர் ரசீதை நோட்டீசுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

நோட்டீசில் ஏதாவது திருத்தங்கள் செய்ய வேண்டியிருந்தால், திருமண அதிகாரியின் முன்னிலையிலேயே திருத்தங்களைச் செய்யலாம். அல்லது திருத்தங்கள் செய்வதற்காக நோட்டீசு தபால் மூலம் அனுப்பப்பட்டால், குறிப்பிட்ட கெடுவுக்குள் திருத்தங்களைச் செய்து அதைத் திருமண அதிகாரிக்குத் திரும்ப அனுப்பிவிட வேண்டும். திருத்தங்கள் செய்யப்பட்ட இடங்களில் மணமகன், மணமகள் இருவரும் அடையாளக் கையெழுத்து செய்யவேண்டும். (விதி4.)

மேற்கண்ட நோட்டீசுக்கு ஒரு நகல் எடுத்து அதைத் திருமண அதிகாரியானவர் தமது ஆபீசில் பிரசுரம் செய்வார். ஆட்சேபனை செய்பவர்கள் தங்களுடைய ஆட்சேபனைகளை எழுதிக் கொடுப்பதுடன் அதற்குக் கட்டணம் ரூ2-ம் கட்டவேண்டும். ஆட்சேபனைகள் சரியாக இல்லாவிட்டால் அவற்றைத் திருமண அதிகாரி நிராகரித்துவிடலாம். அப்படி நிராகரிக்கப்படாத ஆட்சேபனைகளைக் குறித்துத் திருமண அதிகாரியானவர் விசாரணை நடத்துவார். தஸ்தாவேஜு ருசுவாக ஏற்றுக் கொள்ளவும் சாட்சிகளைச் சம்மன் செய்து விசாரிக்கவும் திருமண அதிகாரிக்கு அதிகாரமுண்டு.

வேறு முறைப்படி திருமணம் செய்து கொண்டவர்கள் விசேஷ விவாகச் சட்டப்படி தங்களுடைய திருமணத்தைப் பதிவு செய்து கொள்ள நமூனா 3-ன்படி திருமண அதிகாரிக்கு மனுப் போடவேண்டும். இதற்கும் ரூ. 3. கட்டணம் கட்டவேண்டும். இதற்கு ஆட்சேபனை செய்பவர்களும் ரூ. 2. கட்டணம் கட்ட வேண்டும்.

திருமணம் புதிதாகச் செய்துகொள்ளத் தம்பதிகள் கொடுக்கும் நோட்டீசின் பேரில் ஆட்சேபனை செய்பவர்களும் சரி; வேறு முறைப்படி ஏற்கனவே திருமணம் செய்துகொண்டவர்கள் இச்சட்டப்படி திருமணப் பதிவு செய்துகொள்ளுவதை ஆட்சேபனை செய்பவர்களும் சரி; தங்களுடைய ஆட்சேபனையைத் தெரிவிக்க முன் கண்டபடி ரூ. 2 கட்டணம் செலுத்துவது தவிர, தங்களுடைய ஆட்சேபனைகளைத் திருமண அதிகாரி விசாரணை செய்வதற்காக அவர்கள் ரூ. 50 கட்டணம் கட்டவேண்டும்.

### மற்றக் கட்டணங்கள்

இச் சட்டப்படி திருமணம் செய்துகொள்ளும் தம்பதிகளும்; திருமணப்பதிவு செய்துகொள்ளும் தம்பதிகளும் அதற்காக ரூ. 10. கட்டணம் கட்ட வேண்டும். திருமண அதிகாரியின் ஆபீசில் அல்லாமல் வெளியே திருமண அதிகாரியை அழைத்துப்போய் இச் சட்டப்படி திருமணம் செய்து கொள்ளவும்; திருமணப்பதிவு செய்து கொள்ளவும் மேற்கண்ட ரூ. 10 தவிர அதிகக் கட்டணம் ரூ. 15 கட்டவேண்டும். திருமண நோட்டீசு ரிஜிஸ்டரிலிருந்தோ, திருமண சர்டிபிகேட் புஸ்தகத்திலிருந்தோ நகல் வாங்கக் கட்டணம் ரூ. 2; தேடு கூலி வருடம் ஒன்றுக்கு ரூ. 1; நடைமுதல் வருடத்திற்கு அணா 8; சாட்சி சம்மன்படி அணா 8. (31-12-1954. சென்னை சர்க்கார் கெஜட் விசேஷ வெளியீடு - பாகம் I.)



# வழக்கும் தீர்ப்பும்

[இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி, சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாட்டு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.]

## 1941 ல் பர்மாவிலிருந்த வாதியின் கடையில் பிரதிவாதி சரக்கு வாங்கிப் பணம் கொடுக்கவில்லை. 1946 ல் இந்தியாவில் அத்தொகைக்கு வாதி தாவா செய்து டிக்ரி வாங்கச் சட்டம் இடங்கொடுத்தது. காலாவதிச் சட்டத்தில் ஒரு முக்கிய பிரச்னை பற்றி 'புல் பெஞ்சு' தீர்ப்பு.

[ஆதாரம்:—1954 (2) மதராஸ் லா ஜர்னல் 731.]

இங்கிருந்து அயல் நாடு போய் வியாபாரம் செய்பவர்களும், அயல் நாட்டுத் தொடர்பு உள்ளவர்களும், கவனித்து வைத்துக் கொள்ள வேண்டிய முக்கிய வழக்குகளில் இது ஒன்று. முதலில் இவ்வழக்கின் விபரங்களைக் கவனித்துப் பிறகு இதில் எழுந்து முடிவு செய்யப்பட்ட சட்டப் பிரச்னையைக் கவனிப்போம்.

முத்துக்கண்ணு முதலியாருக்கு ரங்கூனில் ஒரு கடை உண்டு. இக்கடையில் ஆண்டியப்பா பிள்ளை என்பவரும் வேறு ஒருவரும் சேர்ந்து 23-8-1941 முதல் 18-10-1941 வரையில் (தேதிகளைக் கவனிக்கவும்) சரக்கு வாங்கிப் பற்று வரவு செய்து வந்த வகையில் அவர்கள் அக்கடைக்கு ரூ. 1466-10-4 கொடுக்க வேண்டிய தாகப் பாக்கி ஏற்பட்டது. இவ்விருவர்களிடமிருந்தும் தமக்கு அத்தொகை கிடைக்க வேண்டுமென்று வாதி (முத்துக்கண்ணு முதலியார்) 1946ல் ராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள பரமக்குடி டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டில் தாவா செய்தார். பற்று வரவு முடிந்து மூன்று வருடங்களுக்கு மேலாகி விட்டாலும், தம்முடைய தாவா காலாவதி ஆகவில்லை என்று பிராதில் வாதி குறிப்பிட்டிருந்தார். ஏனென்றால் பிரதிவாதிகள் இருவரும் இந்தியாவில் வசிக்காமல் அயல் நாட்டில் (ரங்கூனில்) வசித்து வந்ததாகவும், தாம் தாவா செய்வதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்புதான், இரண்டாம் பிரதிவாதி இந்தியாவுக்குத் திரும்பிவந்திருக்கிறார் என்றும், காலாவதிச்சட்டப்படி இரண்டாம் பிரதிவாதி இந்தியா திரும்பிவந்த தேதியிலிருந்துதான் காலாவதிக் கணக்குச் செய்யப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தார். முதல் பிரதிவாதி ரங்கூனிலேயேதான் இருந்தார். அவர் இங்கு வந்து கட்சியாடவில்லை. 'எக்ஸ்பார்ட்டி'யாக இருந்து விட்டார். இந்தியா திரும்பிய இரண்டாம் பிரதிவாதி மட்டில் கட்சியாடினார். இரண்டாம் பிரதிவாதியானவர் ரங்கூனில் வாதி கடையில் தாம் பற்று வரவு செய்து வந்ததை ஒப்புக் கொண்டார். ஆனால் பணம் கொடுத்துக் கணக்குத் தீர்த்து விட்டதென்றும்; தாவா காலாவதியாகி விட்டதென்றும் இரண்டு கட்சிகள் சொன்னார்.

இவ்வழக்கை முதலில் விசாரித்த ஜில்லா முன்சிப்பும் சரி, பிறகு அப்பீலை விசாரித்த ராமநாதபுரம் சப்ஜட்ஜும் சரி, இரண்டாம் பிரதிவாதி பணம் கொடுத்துக் கணக்கைத் தீர்த்து விட்டதாகச் சொல்லுவது உண்மை அல்ல என்று அபிப்பிராயப்பட்டனர். ஆனால் வாதியின் தாவா காலாவதியாகி விட்டதென்று இரண்டு கோர்ட்களும் அபிப்பிராயப்பட்டு வாதியின் தாவாவைத் தள்ளி விட்டனர். அதன் பேரில் வாதி முத்துக்கண்ணு முதலியார் சென்னை ஹைகோர்ட்டுக்கு இரண்டாவது அப்பீல் செய்தார். இந்த இரண்டாவது அப்பீலை முதலில் சென்னை ஹைகோர்ட்டில் இரண்டு உயர் நீதி பதிகள் (நீதிபதிகள் சத்தியநாராயணராவும் ராஜகோபாலனும்) விசாரிக்க ஆரம்பித்தனர். கீழ்க் கோர்ட்கள் இரண்டும், 1928-ஆம் வருடத்திய ஒரு சென்னை ஹைகோர்ட்டுத் தீர்ப்பைப் பின் பற்றியே, வாதியின் தாவா

லைத் தள்ளி இருந்தாலும் 1928-ஆம் வருடத்திய அத் தீர்ப்பானது சரியா என்று இரண்டு உயர் நீதிபதிகளுக்கும் சந்தேகம் ஏற்பட்டதன் பேரில், இவ்வழக்கை மூன்று உயர் நீதிபதிகள் கொண்ட 'புல்பெஞ்சு' என்ற நிறை மன்றத்தால் விசாரணை செய்து தீர்ப்பு அளிக்கப்பட்டது. 1928-ஆம் வருடத்தியத் தீர்ப்பு தப்பு என்று மூன்று உயர் நீதிபதிகளும் அபிப்பிராயப்பட்டு இவ்வழக்கில் வாதிக்கு இரண்டாம் பிரதிவாதி பேரில் மட்டில் டிக்ரி கொடுத்தனர். எல்லாக் கோர்ட்டுச் செலவு தொகைகளுடன்.

இச் சட்டப் பிரச்னை என்ன என்று கவனிப்போம். இந்தியக் காலாவதிச் சட்டப்படி பற்று வரவு நின்ற மூன்று வருடத்திற்குள்ளேயே தான் கோர்ட்டில் தாவா போட வேண்டும். மூன்று வருடத்திற்கு மேல் காலாவதியாகி விடும். ஆனால் காலாவதிச் சட்டத்தின் செக்ஷன் 13 என்ற ஷரத்தின் படி ஒரு விதி விலக்கு இருக்கின்றது. அதாவது, ஒரு தாவாவுக்குக் காலாவதிக் காலத்தைக் கணக்குச் செய்யும் போது, பிரதிவாதிகள் எவ்வளவு காலம் இந்தியாவில் வசிக்காமல் அயல் நாட்டில் வசித்து வந்திருக்கிறாரோ, அக்காலத்தை நீக்கிக் கணக்குச் செய்ய வேண்டுமென்று இருக்கிறது. உதாரணமாக, ஒருவர் இந்தியாவில் கடன் வாங்கி ஒரு மாதத்திற் கெல்லாம் அயல்நாடு போய் அங்கே பத்து வருடங்கள் இருந்து, இந்தியா திரும்பி வருவதாக வைத்துக் கொள்ளுவோம். இந்தியக் காலாவதிச் சட்டப்படி அவர் இந்தியா திரும்பிய பிறகு, 2 வருடம் 11 மாதங்களுக்குள் அவர் மீது தாவா செய்யலாம். ஏனென்றால் அவர் கடன் வாங்கிய பிறகு ஒரு மாதம் தான் இந்தியாவில் இருந்திருக்கிறார். காலாவதி பாக்கி இரண்டு வருடங்கள் பதினொரு மாதங்களும் அவர் அயல் நாட்டிலிருக்கும் வரை ஓடாது. அவர் இந்தியா திரும்பிய பிறகு தான் காலாவதிக் கடிகாரம் மறுபடியும் ஓட ஆரம்பிக்கும். சரி, கடன் வாங்கியது இந்தியாவில் அல்லாமல், அயல் நாட்டிலேயே இந்தியர் ஒருவர் வேறு இந்தியரிடம் கடன் வாங்கி, கடன் வாங்கியவர் அக் கடனைத் திருப்பிக் கொடுக்காமல் இருந்து பத்து வருடங்கள் கழித்து இந்தியா திரும்புவாரானால், அவர் இந்தியாவுக்கு வந்த தேதியிலிருந்து 3 வருடங்களுக்குள் கடன் கொடுத்தவர் அவர் மீது இந்தியாவில் தாவா செய்யலாமா? அத் தாவாவுக்குக் காலாவதிக் கணக்கு எப்படி என்ற பிரச்னை தான் 1928-ஆம் வருடத்தில் ஒரு வழக்கில் எழுந்தது. (28 லா வீக்லி 645.) அவ்வழக்கில் என்ன நடந்ததென்றால்—தஞ்சை ஜில்லா மன்னார்குடியைச் சேர்ந்த இருவர் தொழில் நடத்திச் சம்பாதிப்பதற்காகக் கோலாலம்பூர் சென்றனர். அங்கே ஒருவரிடம் மற்றவர் கடன் வாங்கி 1921-ல் ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்திருந்தார். மூன்று வருடங்களுக்குள் கடன் திருப்பிக் கொடுக்கப்படவில்லை, இருவரும் இந்தியா திரும்பி வந்த பிறகு 1925-ல் கடன் கொடுத்தவர் மன்னார்குடி முன்சிப் கோர்ட்டில் தாவா செய்தார். பிரதிவாதி அயல் நாட்டில் வசித்து வந்த காலத்தை நீக்கினால் நோட்டுக் காலாவதி ஆகவில்லை. இவ்வழக்கு ஹைகோர்ட் வரையில் போயிற்று. ஹைகோர்ட்டில் இரண்டு உயர் நீதிபதிகள், தாவா காலாவதியாகி விட்டதென அபிப்பிராயப்பட்டனர். இந்தியாவில் வியாஜ்ய மூலம் ஏற்பட்டிருந்தால் தான், பிரதிவாதி அயல் நாட்டில் வசித்து வந்த காலத்தை நீக்கிக் காலாவதிக் கணக்குச் செய்யலாம். அயல் நாட்டிலேயே வியாஜ்ய மூலம் (Cause of action) ஏற்பட்டிருந்தால், அப்படிக் கழித்துக் கொள்ள முடியாதென அப்போதைய உயர் நீதிபதிகள் இருவர் அபிப்பிராயப்பட்டு 1928-ல் தீர்ப்பளித்திருக்கின்றனர். இத்தீர்ப்பைப் பின் பற்றித் தான் பிரஸ்தாப வழக்கிலும் பரமக்குடி டிஸ்ட்ரிக்ட் முன்சிப்பும், சப்ஜட்ஜும், வாதியின் தாவாவைத் தள்ளி விட்டனர். ஏனென்றால் பிரஸ்தாப வழக்கில் பற்று வரவு ஏற்பட்ட இடம் ரங்கூனில்; இந்தியாவில் அல்ல. ஆகையால் வியாஜ்ய மூலத்தேதியிலிருந்து காலாவதிக் கணக்குச் செய்ய வேண்டுமென்றும், பிரதிவாதி அயல் நாட்டிலிருந்த காலத்தைக் கழித்துக் கொள்ள முடியாதென்றும் இவர்கள் தீர்ப்புச் செய்திருந்தனர். ஆனால் இவர்கள் பின் பற்றிய 1928-ஆம் வருடத்திய சென்னை ஹைகோர்ட்டுத் தீர்ப்பு சரி அல்ல என்று இப்போது பிரஸ்தாப வழக்கைக் கடைசியில் விசாரித்த மூன்று உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். இந்திய வழக்கு முறைச் சட்டப்படி, ஸ்தாவர சொத்து சம்பந்தமான சில வகை வழக்குகளைத் தவிர மற்ற வழக்குகளை, எந்தக் கோர்ட்டின் எல்லைக்குள் வியாஜ்ய மூலம் ஏற்பட்டதோ அக் கோர்ட்டில் தாவா செய்தாலும் செய்யலாம்; அல்லது, பிரதிவாதி எந்தக் கோர்ட் எல்லைக்குள் வசித்து வருகிறாரோ அந்தக் கோர்ட்டில் தாவா செய்தாலும் செய்யலாமென்று இருக்கிறது. பிரதிவாதி அக் கோர்ட்டின் எல்லைக்குள் வசித்து வரும் காரணத்தினால் ஒரு கோர்ட்டில் தாவா செய்யப்படும் போது, அத்தாவாவுக்கு வியாஜ்ய மூலம் எங்கே ஏற்பட்டதென்று கவனிக்க வேண்டியதில்லை. ஏனென்றால் வியாஜ்ய மூலம் எங்கே ஏற்பட்டிருந்தாலும் சரி, அது அயல் நாட்டில் ஏற்பட்டிருந்தாலும் சரி, பிரதிவாதி வசித்து வரும், அல்லது தொழில் நடத்திவரும் இடத்தில் தாவா செய்

வதை நமது சட்டம் அனுமதிக்கின்றது. அயல் நாட்டில் வியாஜ்ய மூலம் ஏற்பட்டிருந்தாலும் அதே காலாவதிச் சட்டம் தான். பிரதிவாதி அயல் நாட்டில் வசித்து வந்த காலத்தைக் காலாவதிக் கணக்கில் நீக்கி விடலாமென்ற விதிவிலக்கு எல்லாத் தாவாக்களுக்கும் பொருந்தும். ஆகையால் பிரஸ்தாப வழக்கில் வியாஜ்ய மூலம் ஏற்பட்டது ரங்கூனாக இருந்தாலும், இரண்டாம் பிரதிவாதி இந்தியாவுக்குத் திரும்பியவுடன் அவர் வசிக்கும் இடத்தில் அவர் மீது போடப்பட்ட இத் தாவா காலாவதி ஆகவில்லை என்றும்; ஆனால் பர்மாவிலேயே இருக்கும் முதல் பிரதிவாதி மீது போடப்பட்ட தாவா செல்லாதெனவும் உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். முதல் பிரதிவாதி மீது தாவா தள்ளப்பட்டது. இரண்டாம் பிரதிவாதி மீது பூராத் தொகைக்கும் எல்லாக் கோர்ட்டுச் செலவு தொகைக்கும் டிக்ரி செய்யப்பட்டது. 1928-ஆம் வருடத்தில் அளிக்கப்பட்ட ஹைகோர்ட்டுத் தீர்ப்பு சரி அல்ல என்றும் மூன்று உயர் நீதிபதிகளும் அபிப்பிராயப்பட்டனர்.

## பொது நிலத்திலிருக்கும் பொதுக் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்கும் பாத்தியம்

இரண்டு நபர்களுக்குப் பொதுவான ஒரு நிலத்தில் ஒரு கிணறு இருக்கிறது. இவ்விருவர்களில் ஒருவர் மட்டில் தனிமையில் அந்நிலத்திற்குப் பக்கத்திலுள்ள ஒரு நிலத்தை வாங்கி இருக்கிறார். தமக்கு மட்டில் ஏகதேச சொந்தமான இப்புதிய நிலத்திற்கு, அப்பொதுக் கிணற்றிலிருந்து அவர் தண்ணீர் இறைத்துச் சாகுபடி செய்யலாமா என்ற பிரச்னை ஒரு வழக்கில் ஏற்பட்டது. பொது நிலத்தின் உபயோகத்திற்கு மட்டில்தான் அதிலிருக்கும் பொதுக் கிணற்று ஜலத்தை உபயோகித்துக் கொள்ளலாமே ஒழிய, புதிதாக வாங்கப்பட்ட நிலத்திற்காக அக் கிணற்றை உபயோகிக்கக் கூட்டாளிகளில் ஒருவருக்கு மட்டில் பாத்தியமில்லை என்று ஒரு சமீபத் தீர்ப்பில் சென்னை ஹைகோர்ட் உயர்நீதிபதி கோவிந்தமேனன் அவர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். (1950-ஆம் வருடத்திய 1789-நெ. இரண்டாவது அப்பீலில் 16-9-1954ல் அளிக்கப்பட்ட தீர்ப்பு.)

## இந்து பிரிபடாத குடும்பத்தில், ஒரு பாகஸ்தர் பெயருக்குப் பிராமிசரி நோட்டு—பாகம் செய்து கொள்ளும்போது அப்புரோ நோட்டுக் கடன் வேறு ஒரு பாகஸ்தருடைய பாகத்திற்கு வைக்கப் பட்டது. புரோ நோட்டின் மீது யார் தாவா செய்யலாம்?

ஒரு 'அன்டிமாண்டு' அல்லது பிராமிசரி நோட்டிலுள்ள பாத்தியத்தை வேறு ஒருவருக்கு மாற்ற வேண்டுமானால், அப்பிராமிசரி நோட்டிலேயே 'மேடோவர்' அல்லது 'எண்டார்சுமெண்டு' எழுதப்பட வேண்டும். அப்படிச் செய்தால்தான் நோட்டின் பாத்தியம் மாறும். இவ் வழக்கில், பிரிபடாத இந்தக் குடும்பத்திற்குச் சொந்தமான பணத்தைக் கடன் கொடுத்து அதற்கு நோட்டு எழுதி வாங்கும்போது பாகஸ்தர் ஒருவர் பேரில் பிராமிசரி நோட்டு எழுதி வாங்கப்பட்டது. பிறகு அக்குடும்பத்தில் பாகம் ஏற்பட்டது. அதில் இப்பிராமிசரி நோட்டுப் பணமானது வேறு ஒரு பாகஸ்தருடைய பாகத்திற்கு வைக்கப்பட்டது. ஆனால் பிராமிசரி நோட்டின் பேரில் யாதொரு 'மேடோவரோ' 'எண்டார்சமெண்டோ' எழுதப்படவில்லை. இப்பிராமிசரி நோட்டுத் தொகையானது யாருடைய பாகத்திற்கு வைக்கப்பட்டதோ, அவரே கடன் கொடுக்கவேண்டியவர்மீது தாவா செய்து தொகை வசூலிக்க உரிமை உள்ளவர் என்றும், நோட்டின்மீது எண்டார்சுமெண்ட் எழுதப்படாவிட்டாலும், அதில் கண்ட கடனை வசூலிக்க அவருக்கே உரிமை உண்டென்றும் உயர்நீதிபதி கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சமீபத்தில் அளித்த ஒரு தீர்ப்பில் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். (1950-ஆம் வருடத்திய 1535 நெ. இரண்டாவது அப்பீலில் 12-10-94ல் அளிக்கப்பட்ட தீர்ப்பு.)

# தஞ்சை சாகுபடிதார் - பண்ணையாள் பாதுகாப்புச் சட்ட வழக்குகள்.

## ரிவின்யூகோர்ட்டின் அதிகாரம். அப்பீலிலும் சாட்சிகளை விசாரிக்கலாம்

தஞ்சை சாகுபடிதார்—பண்ணையாள் பாது காப்புச் சட்டத்தின்படி நியமிக்கப்பட்டிருக்கும் சமரச அதிகாரி (கன்சிலியேஷன் ஆபீஸர்) செய்யும் உத்தரவுகளின் பேரில் ரிவின்யூ கோர்ட் அப்பீல் விசாரணை நடத்தும்போது, அப்பீலில் மேற்கொண்டு தேவையானால் சாட்சி விசாரணைகள் செய்யவும் ருசுக்களை ஏற்றுக் கொள்ளவும் ரிவின்யூ கோர்ட்டுக்கு அதிகாரம் இருக்கிறதென்று ஒரு சமீப 'ரிட்' மனுவில் சென்னை ஹைகோர்ட் உயர்நீதிபதி ராஜ கோபாலன் அவர்கள் தீர்ப்பளித்திருக்கின்றனர். (1953-ஆம் வருடத்திய 892-ம் நம்பர் ரிட் மனு வின்பேரில் 10-9-1954ல் அளிக்கப்பட்ட தீர்ப்பு.)

## குத்தகைதார் குத்தகை கொடுக்கவில்லை என்று அவரை அகற்ற மனுப்போடுவதற்குமுன், சரியான குத்தகை எவ்வளவு என்று நிர்ணயம் செய்துகொள்ள வேண்டுமா?

தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாது காப்புச் சட்டத்தின் செக்ஷன் 10-ன்படி குத் தகை கொடுக்காத குத்தகைதாரை நிலத்தை விட்டு அப்புறப்படுத்த வேண்டுமென்று நிலச் சொந்தக்காரர் ரிவின்யூ கோர்ட்டுக்கு மனுப் போடவேண்டும். அப்படி மனுப்போடுவதற்கு முன்பு, குத்தகைதார் தஞ்சைச் சட்டப்படி கொடுக்கவேண்டிய சரியான குத்தகை எவ்வளவு என்பதை, செக்ஷன் 8 (2) ஷரத்துப்படி நிர்ண யம் செய்துகொண்டு பிறகுதான் குத்தகை தாரை அகற்ற மனுப்போடவேண்டுமென்று ஒரு சமீப வழக்கில் வாதாடப்பட்டது. இதை சென்னை ஹைகோர்ட் உயர்நீதிபதி ராஜ கோபாலன் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. குத்தகைதாரை அகற்ற வேண்டுமென்று போடப்படும் மனுவிலேயே, குத்தகை பாக்கி எவ்வளவு என்பதை முதலில் ரிவின்யூகோர்ட் நிர்ணயம் செய்துகொள்ள வேண்டுமென்றும்; பிறகு அக் குத்தகை பாக்கியை 30 நாட்களுக் குள் கொடுத்துவிட வேண்டுமென்று ரிவின்யூ கோர்ட்டானது குத்தகைத-ருக்கு செக்ஷன் 10 (1) (c) ஷரத்தின்படி நோட்டீசு அனுப்ப வேண்டுமென்றும், அக்கெடுவுக்குள் நோட்டீசில் கண்ட குத்தகை பாக்கி கொடுக்கப்படாமலிருந் தால் குத்தகைதாரை அகற்ற உத்தரவு பிறப் பிக்கப்படவேண்டுமென்றும் உயர்நீதிபதி அவர் கள் அபிப்பிராயப்பட்டுத் தீர்ப்பளித்தனர். நியாய மான அல்லது சரியான குத்தகை எவ்வளவு என்று நிர்ணயம் செய்து கொள்ள நிலச் சொந் தக்காரர் தனி மனு ஒன்று முதலில் போட்டு, குத்தகையை நிர்ணயம்செய்து கொண்டு பிறகு தான் குத்தகைதாரை அகற்ற அவர் மனுப் போடவேண்டுமென்ற அவசியம் இல்லை என உயர்நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர். (1953-ஆம் வருடத்திய ரிட் மனுக்கள் 933, 935 இவைகளில் 13-9-1954ல் ஏற்பட்ட தீர்ப்பு.)

## நேரில் சாகுபடி செய்யும் குத்தகைதாரும் உட்குத்தகைக்கு விடும் குத்தகைதாரும்

தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாது காப்புச் சட்டப்படி "சாகுபடிதார் அல்லது குத் தகைதார்" (Cultivating tenants) என்பது தம்முடைய சரீர உழைப்பையும் சேர்த்துக் கொண்டோ, அல்லது தம்முடைய குடும்பத் தினருடைய சரீர உழைப்பையும் சேர்த்துக் கொண்டோ சாகுபடி வேலை செய்பவரைத்தான் குறிக்கும். அவ்விதமுள்ள குத்தகைதாரர் களுக்குத்தான் தஞ்சைச் சட்டத்தில் கண்ட சலுகைகள் உண்டு. ஒரு குத்தகைதார் குத் தகை நிலங்களைப் பண்ணையாட்களைக்கொண்டு சாகுபடி செய்தார். தம்முடைய சரீர உழைப்பு ஒன்றுமில்லை. ஆனால் தம்முடைய நேர் மேற் பார்வையில் சாகுபடி வேலைகளைக் கவனித்து வந்தார். இவர் வெறும் நடுநபர் (Intermediary) அல்ல என்றும் தஞ்சைச் சட்டப்படி இவர் ஒரு சாகுபடிதார் என்றும், சாகுபடிதாருக் குள்ள உரிமைகள் இவருக்குண்டென்றும் ஒரு சமீப வழக்கில் உயர்நீதிபதி ராஜகோபாலன் அவர்கள் தீர்ப்பளித்திருக்கின்றனர். நேரில் போய் மேற் பார்வை பார்த்து, சாகுபடி வேலை களை நடத்துவதே ஒருவகைச் சரீர உழைப்பாக லாம். எவ்வித மேற்பார்வையானது சரீர உழைப்பாகும், எவ்வித மேற்பார்வையானது சரீர உழைப்பாகாது என்பது அந்தந்த வழக்கு களின் சந்தர்ப்பங்களையும் சூழ்நிலையையும் பொறுத்தது. ஆனால் ஒரு குத்தகைதார், குத்தகை நிலங்களை உட்குத்தகைக்கு விட்டு விட்டால் அவர் தஞ்சைச் சட்டப்படி ஒரு 'சாகு படிதார்' அல்ல. அவர் நிலச் சொந்தக்கார ரைப் போலவே பாவிக்கப்படுவார் என்று உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர். (1953-ஆம் வருடத்திய ரிட் மனு 695-ல் 13-9-1954ல் அளிக்கப்பட்ட தீர்ப்பு.)

# கேள்வியும் பதிலும்



இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் தமிழில் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியும் தனித்தனியான காகிதத்தில், பதில் எழுதஇடம் விட்டு எழுதி அனுப்பவேண்டும். தவிர ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில் தான், அதன் 'பதில்' பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே. கேள்விகளுக்கு நேரில் பதில் அனுப்புவதும் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளுவதும் இயலாது.

## பதிவுத் திருமணமும் பெண் வார்சு பாத்தியமும்.

**1. கேள்வி:** (R. M. V. ராமசாமி—வெள்ளாளப்பட்டி.) ஒரு இந்துக் குடும்பத்தில் பதிவுத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு ஒரு ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் பிறந்தன. ஆண் குழந்தையும் தாயும் இறந்து விட்டார்கள். பெண் குழந்தைக்குத் தகப்பன் சொத்தில் பாகம் உண்டா?

**பதில்:** தகப்பன் இருக்கும்போது இப் பெண் குழந்தைக்கு அவருடைய சொத்தில் யாதொரு பாகமோ பாத்தியமோ ஏற்படாது. ஆனால் உயில் மூலம் தம்முடைய சொத்துக்களை விநியோகம் செய்யாமல் தகப்பன் இறந்து விட்டால் அவருடைய சொத்துக்கள் யாவும் இப்பெண் குழந்தையைச் சேரும். விசேஷ விவாகச் சட்டப்படி (Special Marrige Act) பதிவுத் திருமணம் செய்துகொள்ளுபவர் இந்துவாக இருந்தாலும், அவருடைய சொத்துக்களுக்கு இந்திய வார்சுரிமைச் சட்டம் (Indian Successihn Ace) என்ற சட்டப்படித்தான் வார்சு பாத்தியம் ஏற்படும். பதிவுத் திருமணம் செய்து கொள்ளுபவருக்கு அவர் இறக்கும் போது மனைவியோ, வேறு குழந்தைகளோ இல்லாமல் ஒரு பெண் குழந்தை மட்டில் இருந்தால் அவருடைய எல்லாச் சொத்துக்களையும் இந்திய வார்சுரிமைச் சட்டப்படி அப் பெண் குழந்தையே சர்வ சுதந்தர பாத்தியங்களுடன் அடையும்.

## உயில் மூலம் கொடுக்கப்படும் சொத்து.

**2. கேள்வி:** (ராமகிருஷ்ணய்யர் — ஆத்தூர்) இந்து ஒருவர் சுயமாகச் சம்பாதித்த சொத்துக்களை, அவருக்குக் குழந்தை இல்லாத காரணத்தினால், அவர் தம்முடைய அண்ணன் பேரன், 3 வயதுள்ள ஆண் குழந்தைக்கு உயில் சாசனம் எழுதி வைத்தால், அச்சொத்துக்களில் அக் குழந்தையின் அண்ணன் தம்பிகளுக்கும் பாத்தியம் ஏற்படுமா?

**பதில்:** ஏற்படாது. உயில் மூலம் சொத்துக்கள் எந்தக் குழந்தைக்குக் கொடுக்கப்படுகிறதோ அக்குழந்தைக்கு மட்டில்தான் பாத்தியம் ஏற்படும்.

## பிரிபடாத இந்துக் குடும்பத்தில் ஒருவர் பெயரில் மட்டும் வாங்கும் சொத்து.

**3. கேள்வி:** (ஷை) ஒரு இந்துக் குடும்பத்தில் சகோதரர்களுக்குள் பாகப் பிரிவினையாகாமல் இருக்கும்போது, ஒரு சகோதரர் பெயரில் மட்டில் ஒரு சொத்து கிரயம் வாங்கப்படுகிறது, பிறகு பாகம் பிரிவினைக் காலத்தில், ஷை சொத்தில் எல்லாச் சகோதரர்களுக்கும் உரிமை

உண்டா? அல்லது அது கிரயம் வாங்கிய நபருக்கு மட்டில்தான் உரிமை உள்ளதா?

**பதில்:** குடும்பப் பொதுப் பணத்தைக் கொண்டு அச்சொத்து வாங்கப்பட்டிருந்தால், அச்சொத்து யார் பெயரில் வாங்கப்பட்டிருந்தாலும் அது குடும்பப் பொது சொத்துத்தான். பாகப் பிரிவினை காலத்தில் அச்சொத்தில் எல்லாச் சகோதரர்களுக்கும் பாகம் உண்டு. ஆனால் ஒரு சகோதரர் மட்டில் அச்சொத்தைத் தம்முடைய சுயசம்பாத்தியத்தைக் கொண்டோ அல்லது தனிப் பணத்தைக் கொண்டோ கிரயம் வாங்கி இருந்தால், அச்சொத்து அவருடையதே ஆகும். மற்றச் சகோதரர்கள் அதில் பாகம் கேட்க முடியாது.

## அக்கிரம ஆக்கிரமிப்பை அகற்றுவது எப்படி?

4. **கேள்வி:** (குருசாமி—போடி) ஒருவருடைய பூமியில் பக்கத்து நிலக்காரர் அக்கிரமமாகப் பிரவேசித்து, ஆக்கிரமிப்புச் செய்து, மரங்களையும் செடிகளையும் வெட்டி ஆர்ஜிதம் செய்து கொண்டால், ஷை ஆக்கிரமிப்பைச் சீக்கிரமாகவும் சுருக்கச் செலவிலும் அப்புறப்படுத்த முடியுமா? கிரிமினல் நடவடிக்கை எடுக்க முடியுமா? அல்லது சிவில் மூலம்தான் போக வேண்டுமா? இதற்குக் காலாவதி உண்டா?

**பதில்:** (1) ஒருவருடைய பூமியில் அதில் பாத்தியமில்லாத வேறு ஒருவர் பிரவேசித்து அனுபவிக்க ஆரம்பித்தால், அவர் மீது சிவில் கோர்ட்டில் நிலக்காரர் தாவா செய்து, அவரைப் பூமியை விட்டு அகற்றலாம். இது சாதாரண வழி. இதற்குக் காலாவதி 12 வருடம். அதாவது பாத்தியமில்லாத ஒருவர் பூமியில் பிரவேசித்த தேதியிலிருந்து 12 வருடங்களுக்குள் தாவா செய்யலாம் என்பது பொதுவான காலாவதிச் சட்ட விதி. இது சுருக்கமான வழி அல்ல. இரு கட்சிகளும் 'முஸ்தீபாக'க் கோர்ட்டில் கட்சிகளை நடத்தினால், பல கோர்டுகளுக்குப் போய் முடிவாக நில பாத்தியத்தை ஸ்தாபித்துக் கொள்ளக் கால தாமதமும் பணச் செலவும் ஆகும்.

(2) ஒருவருடைய சுவாதீனத்திலிருக்கும் ஸ்தாவர சொத்தை, சட்ட பூர்வமான வழியில் அல்லாமல், உதாரணமாக, பலாத்காரமாய் வேறு ஒருவர் பிடுங்கிக்கொண்டு விட்டால் சுவாதீனத்தை இழந்தவர் 6 மாதங்களுக்குள் சிவில் கோர்ட்டில் தாவா செய்து தம்முடைய சுவாதீனத்தைத் திருப்பிக்கொள்ளலாம் ('ஸ்பெஸிபிக் ரிலீப்' ஆக்ட்—செக்ஷன் 9 ) இவ்விதத் தாவாவுக்கு கோர்ட் பீசுக் கட்டணமும் பாதிதான். நிலத்தின் பாத்தியா பாத்தியங்களைப் பற்றி இவ்வித தாவாக்களில் விசாரணை செய்யப்பட மாட்டாது. பாத்தியமிருந்தாலும், பாத்தியமில்லாமலிருந்தாலும், வாதியானவர் தாவாவுக்கு முன் 6 மாதத்திற்குள் அந்நிலத்தைத் தம்முடைய சுவாதீனத்தில் வைத்திருந்தாரா என்ற ஒரே பிரச்னைதான் இவ்வித வழக்குகளில் விசாரணை செய்யப்படும். இவ்வித வழக்குகளில் ஏற்படும் தீர்ப்பின் பேரில் அப்பீல் கிடையாது. ஆனால் இவ்விதச் சுருக்க வழக்குகளின் முடிவு எவ்விதமிருந்தாலும், பூமிக்குப் பாத்தியமுள்ளவர், சாதாரண முறைப்படி, சிவில் கோர்ட்டில் தம்முடைய பாத்தியத்தை ஸ்தாபித்துக் கொள்ளவும் சொத்து சுவாதீனமடையவும் தாவா செய்யலாம். (3) தவிர ஒருவருடைய சுவாதீனத்திலிருக்கும் பூமியில், வேறு ஒருவர் ஒரு குற்றம் செய்வதற்காகவோ, அல்லது சுவாதீனத்திலிருப்பவரைப் பயமுறுத்தவோ, அவமானப்படுத்தவோ, துன்புறுத்தவோ அப்பூமியில் பிரவேசிப்பது ஒரு கிரிமினல் குற்றமாகும். (இந்தியன் பீனல் கோடு—செக்ஷன் 441)

5. **கேள்வி:** (L 2664) ஒரு பள்ளிக்கூட மானேஜர், சர்க்கார் கிராண்ட் வந்த பின்னும் மூன்று நான்கு மாதங்கள் உபாத்தியாயருக்குச் சம்பளம் கொடுக்கவில்லையானால், அவர் பேரில் கோர்ட்டில் தாவா செய்யலாமா?

**பதில்:** சம்பளப் பாக்கிக்குக் கோர்ட்டில் தாவாச் செய்யச் சட்டத்தில் யாதொரு தடையுமில்லை. ஆனால் தாவா செய்து சம்பளம் வாங்கும் உபாத்தியாயருக்கு அங்கே வேலை தங்குமா என்று அவரே கவனித்துக் கொள்ள வேண்டியது அவருடைய சொந்த விஷயமாகும். இது சட்டப் பிரச்னை அல்ல.

## நிலச் சீர்திருத்தங்கள்.

6. **கேள்வி:** (சென்ன செட்டியார்—சென்னம்பட்டி) (1) அரசாங்கத்தின் புதிய திட்டப்படி ஒவ்வொரு விவசாயிக்கு எத்தனை ஏக்கர் மேட்டு பூமி, தோட்டக்கால் பூமி, வயல் பூமி வைத்திருக்கலாம். ஷை பூமியானது குடும்பத்தின் தலைவனுக்கு மாத்திரமா அல்லது குடும்பத்திலுள்ள மக்களுக்கும் சேர்ந்ததா. அரசாங்கச் சட்டப்படி குடும்பத்தின் தலைவனுக்கும் அந்த குடும்பத்தின் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் தனித் தனியாகப் பூமிகள் கணக்கிடப்படுமா? ஒரு நபருக்கு அதிக பூமிகள் இருந்தால் தன் குடும்பத்திலுள்ள மைனர், மேஜர் மக்கள் பேருக்கு தானம் அல்லது கிரயம் செய்தால் இது செல்லத் தக்கதா அல்லது பூர்வீக சொத்தை மக்களுக்குப் பாகப் பிரிவினை செய்யலாமா?

**பதில்:** இப்போது அமுலில் இருக்கும் அரசியல் அமைப்புச் சட்டப்படி ஒரு தனி நபரோ, ஒரு குடும்பமோ, எவ்வளவு விஸ்தீர்ண

முள்ள எவ்வித பூமிகளையும் வாங்கலாம்; வைத்துக் கொள்ளலாம்; இஷ்டப்படி பராதீனமும் செய்து கொள்ளலாம். இது இந்தியப் பிரஜை ஒவ்வொருவருக்கும் உள்ள ஒரு ஜீவாதார உரிமை. இந்த ஜீவாதார உரிமையைப் பாதித்துப் பார்லிமெண்டோ, ராஜ்ய சட்டசபைகளோ சட்டம் செய்தால் கூட அவை செல்லமாட்டா. பொது மக்களின் நன்மையை உத்தேசித்து இவ்வுரிமைக்குச் சில நியாயமான கட்டுப்பாடுகளைச் சட்டங்களின் மூலம் ஏற்படுத்த மட்டில் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஒரு சட்டமானது இந்த ஜீவாதார உரிமையைப் பாதிக்கின்றதா; அப்படிப் பாதித்தால் அது பொது மக்களின் நன்மைக்காக இயற்றப் பட்டிருக்கிறதா; வேலும் அது நியாயமாக இருக்கிறதா என்ற விஷயங்களை எல்லாம் ஆராய்ந்து ஒரு சட்டம் செல்லுமா, செல்லாதா, என்று தீர்ப்புக் கூற நமது நீதி மன்றங்களுக்கு அரசியல் அமைப்புச் சட்டத்தால் உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. இதுதான் இன்று உள்ள சட்டம்.

ஆனால் இப்போது இந்நாட்டில் ஆட்சிப் பீடத்திலமர்ந்திருக்கும் காங்கிரஸ் கட்சியும், காங்கிரஸ் சர்க்காரும் இச் சட்டத்தை மாற்றத் திட்டம் வகுத்திருக்கின்றனர். அதாவது சொத்துச் சம்பந்தமாக இப்போதிருக்கும் ஜீவாதார உரிமைகளை எடுத்துவிட யோசிக்கின்றனர். ஒருவர் எவ்வளவு விஸ்தீர்ணமுள்ள நிலங்களுக்குத்தான் சொந்தக்காரராக இருக்கலாமென்பதைப் பற்றியும்; ஒருவர் தம்முடைய சுவாதீனத்தில் எவ்வளவு நிலம்தான் வைத்துக்கொள்ளலாமென்பதைப் பற்றியும்; அதற்குமேல் ஒருவரிடமுள்ள சொத்துக்களை என்ன செய்வது என்பதைப் பற்றியும் சட்டங்கள் இயற்றப் பார்லிமெண்டுக்கும் சட்டசபைகளுக்கும் அதிகாரம் கொடுக்கும் விதம் நமது அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்ற ஒரு மசோதா கொண்டுவந்திருக்கின்றனர். இம் மசோதாப்படி முதலில் அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப் படும். பிறகு நமக்குச் சென்னைச் சட்டசபை இது விஷயமாகச் சட்டங்கள் இயற்றும். தங்களுடைய கேள்வியிலுள்ள நுட்பமான சந்தேகங்கள் எல்லாம் அவ்விதச் சட்டமோ, அதற்கான மசோதாவோ வந்த பிறகுதான் நிவர்த்தி செய்ய முடியும். தங்களுடைய கேள்வியிலுள்ள சந்தேகங்கள் அதிக நிலம் வைத்திருக்கும் ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள ஆசைப்படும் விஷயங்கள்தான்.

## அடமான பாத்தியத்தை மாற்றுவது.

7. **கேள்வி:** (ரத்தனம்—கோயமுத்தூர்) ஒருவர் தம்முடைய பூமியை வேறு ஒருவருக்கு அடமானமாக வைத்துக் கடன் வாங்கினார். கடன் வாங்கியவர் கேட்டுக் கொண்டபடி ஒரு மூன்றாம் நபர் அந்த அடமானக் கடனைக் கொடுத்து அடமானப் பத்திரத்தை வாங்கித் தம்மிடமே வைத்திருக்கிறார். ஆனால் 'மேடோவர்' பத்திரம் எழுதி ரிஜிஸ்டர் செய்யப்படவில்லை. இப்போது கடன் வாங்கியவர் அப்பணத்தை மூன்றாம் நபருக்குக் கொடுக்க மறுக்கிறார். அவர் கொடுத்த பணத்தை எப்படி வசூல் செய்வது?

**பதில்:** பணம் கொடுத்த மூன்றாம் நபர் அவர் கொடுத்த தொகையைச் சாதாரணக் கடன் போலவே தாவா செய்து வசூல் செய்யலாம். ஆனால் பூமியில் அவருக்கு அடமான பாத்தியம் ஏற்படாது. அடமான பாத்தியத்தையே தம்முடைய பெயருக்கு மாற்றிக் கொள்ள அடமான 'டிரான்ஸ்பர்' பத்திரம் அல்லது 'மேடோவர்' பத்திரம் ஒன்று சரியான ஸ்டாம்பில் எழுதி ரிஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டும். அடமானதாரிடம் பணத்தைக் கொடுத்து அடமானப் பத்திரத்தை அவரிடமிருந்து வாங்கி வைத்துக் கொள்ளுவதால் மட்டில் அடமான பாத்தியம் மாறாது.

## அதிர்ஷ்ட 'பிரைஸ்' சீட்டு குலுக்கிப் போடுவது.

8. **கேள்வி:** (பரமசிவம்—புதுக்கோட்டை.) ஒருவர் அதிர்ஷ்டச் சலுகை நிதி & பாத்திரப் பிரைஸ் சீட்டு என்று ஆரம்பித்து வாரம் அல்லது மாதம் ஒரு முறை மெம்பர்களிடம் சந்தா வசூல் செய்கிறார். வாரம் அல்லது மாதம் ஒரு முறை எல்லாச் சீட்டுகளையும் குலுக்கி, பிரைஸ் பெறும் ஒரு நபருக்குக் குறிப்பிட்டபடி பிரைஸாக பாத்திரமோ அல்லது ரொக்கமோ கொடுக்கிறார். கடைசியில் பிரைஸ் விழாத எல்லா மெம்பர்களுக்கும் குறிப்பிட்டபடி பாத்திரமோ அல்லது ரொக்கமோ கொடுக்கிறார். இந்த மாதிரி ஒரு சீட்டுக் கம்பெனியை ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமா? அப்படியானால் யாருக்கு எப்படி எழுத வேண்டும்?

**பதில்:** சீட்டுகளைக் குலுக்கிப் போட்டு யாருடைய சீட்டு எடுக்கப்படுகிறதோ அவருக்குப் பணமோ அல்லது சாமான்களோ கொடுப்பதற்கு ஆங்கிலத்தில் 'லாட்டரி' என்று பெயர். இவ்வித 'லாட்டரி' நடத்தச் சர்க்காருடைய முன் அனுமதி வேண்டும். அனுமதி இல்லாமல் லாட்டரி நடத்துவது இந்தியன் பீனல் கோடு என்ற குற்றங்களைப்பற்றிய சட்டத்தின் செக்ஷன் 294A—ன்படி ஒரு குற்றமாகும். இதற்கு 6 மாதம் வரை சிறைத் தண்டனையோ அபராதமோ இரண்டுமோ, விதிக்கப்படலாம்.

சென்ற இதழ் தொடர்ச்சி.




# தொழிற்சாலைச் சட்டம்

(விதிகள், அறிக்கைகளுடன் விளக்கம்.)

[தொழிற்சாலைச் சட்டம் (The Factories' Act—1948) என்பது 1948ஆம் வருடத்திய 63ஆவது மத்தியச் சட்டம். இச்சட்டம் 1—4—1949 முதல் அமுலுக்கு வந்தது. இச் சட்ட ஷரத்துக்களும், அதை அனுசரித்துச் சென்னைச் சர்க்காரால் இயற்றப்பட்டுள்ள விதிகளும் "வக்கீல்"—1954 ஜனவரி இதழ் முதல் தொடர்ச்சியாக விளக்கம் செய்யப்பட்டு வருகிறது. இதிலிருப்பது சட்ட விளக்கமே ஒழிய மொழிபெயர்ப்பு அல்ல.]

## 'விபத்து ரிஜிஸ்டர்'

ஒவ்வொரு தொழிற்சாலையிலும் விபத்து ரிஜிஸ்டர் (Register of all accident and dangerous occurrences) என்று நமூனா 26ன்படி ஒரு ரிஜிஸ்டர் வைத்துக்கொள்ள வேண்டும். அதில் எந்தத் தொழிலாளருக்கு விபத்து ஏற்பட்டதென்றும்; விபத்து அல்லது ஆபத்து ஏற்பட்ட தேதி; நமூனா 18ன்படி இன்ஸ்பெக்டருக்கு ரிபோர்ட் அனுப்பப்பட்ட தேதி; விபத்து அல்லது ஆபத்தின் விபரம்; விபத்துக்குட்பட்ட தொழிலாளர் வேலைக்குத் திரும்பி வந்த தேதி; அவர் வேலைக்கு வாராமலிருந்த நாட்கள்—இவை காண்பிக்கப்பட வேண்டும்.

## சோதனைப் புத்தகம் அல்லது 'இன்ஸ்பெக்ஷன் புக்'

ஒவ்வொரு தொழிற்சாலையிலும் 'இன்ஸ்பெக்ஷன் புக்' என்று ஒரு பைண்டு செய்யப்பட்ட புத்தகம் வைக்கப்பட்டிருக்க வேண்டும். அதைத் தொழிற்சாலை இன்ஸ்பெக்டர் கேட்கும்போது; சர்டிபையிங் சர்ஜன் கேட்கும் போதும் தாகல் செய்ய வேண்டும். அதில் அத்தொழிற்சாலைக்கு ஏதாவது விதிவிலக்குகள் அளிக்கப்பட்டிருந்தால் அவைகளின் விபரம் நமூனா 18ன்படிக்கும்; தொழிற்சாலையில் உள்ள அறைகளின் விபரம் நமூனா 29-ன் படிக்கும்; வெள்ளை அடித்த தேதி அல்லது கலர் வாஷ்பெயிண்ட் அல்லது வார்னிஷ் அல்லது தார் அடித்த தேதிகள் நமூனா 7ன்படிக்கும் இந்த 'இன்ஸ்பெக்ஷன் புக்'கில் காண்பிக்கப்பட வேண்டும்.

## வேலை அறைகள்

ஒவ்வொரு தொழிற்சாலையிலும் தொழிலாளர்கள் வேலை செய்யும் அறைகளைப்பற்றிய விபரம் ஒன்று நமூனா 29-ன்படி வைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு அறையிலும் வேலை செய்யக்கூடிய அதிகபட்சமான தொழிலாளர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு என்று அந்த அறை உள் சுவரில் நன்றாகத் தெரியும் விதம் எழுதப்பட்டிருக்க வேண்டும். காற்றோட்டத்திற்காகச் செக்ஷன் 16 (2)ல் கண்ட ஷரத்து தவிர வேறு ஒரு விதியும் இருக்கிறது. அதாவது ஒவ்வொரு தொழிற்சாலையிலும் ஒவ்வொரு தொழிலாளருக்கும் குறைந்த பட்சமாக ஒரு பழக்கத்திற்கு இடம் இருக்கவேண்டும். இச்சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன் ஏற்பட்ட தொழிற்சாலைகளில் ஒவ்வொரு தொழிலாளருக்கும் குறைந்தது 25 சதுர அடி வீதமும், பின்பு ஏற்பட்ட தொழிற்சாலைகளில் ஒவ்வொரு தொழிலாளருக்கும் குறைந்தது 26 சதுர அடி வீதமும் கணக்குச் செய்யப்பட்ட தரை விஸ்தீர்ணம் இருக்கவேண்டும். இந்த விஸ்தீர்ணத்தைக் கணக்குச் செய்யும்போது யந்திரங்கள் வைக்கப்பட்டிருக்கும் இடங்களை நீக்கி, கணக்குச் செய்ய வேண்டும். ஆனால் இவ்விதியிலிருந்து விதிவிலக்கு அளிக்க, சீப் இன்ஸ்பெக்டருக்கு அதிகாரமுண்டு.

விதி 107

## வசதிகளுக்குக் கட்டணம் இல்லை

இச்சட்டப்படி ஒரு தொழிற்சாலையால் தொழிலாளர்களுக்காகச் செய்து கொடுக்கவேண்டிய வசதிகளுக்கும், ஏற்பாடுகளுக்கும் சாதனங்களுக்கும் தொழிலாளர்களிடமிருந்து எவ்விதக் கட்டணமும் வசூல் செய்யக்கூடாது. ஆனால் உணவுச் சாலை (காண்டீன்) சம்பந்தப்பட்ட வரையில் இவ்விதி கிடையாது.

செக்ஷன் 114

வேறு விதமாகச் சட்டங்கள் இருந்தாலொழிய மத்திய சர்க்காராலும் ராஜ்ய சர்க்கார்களாலும் நடத்தப்படும் தொழிற்சாலைகளுக்கும் இச்சட்டம் உண்டு.

செக்ஷன் 116

(தொடர்ச்சி—22-ஆம் பக்கம் கீழே பார்க்கவும்)

# கூட்டுறவுச் சட்டமும் விதிகளும்.

**K. ஸ்ரீநிவாஸன், M. A.**

**(தஞ்சை ஹூட் கூட்டுறவுப் பயிற்சிக் கழக விரிவுரையாளர்.)**

[1932ஆம் வருடத்திய கூட்டுறவுச் சட்டமும் அவை சம்பந்தமான விதிகளும் "வக்கீல்" 1954 மே இதழ் முதல் தொடர்ச்சியாக விளக்கம் செய்யப்படுகின்றன.]

## கூட்டுறவுச் சங்கங்களில் எவர்கள் அங்கத்தினர்களாகச் சேர்க்கப்படக் கூடாது?

கூட்டுறவுச் சங்கத்தில் எவர்கள் மெம்பர்களாகக் சேர்க்கப்படக் கூடாது என்பதைச் சர்க்கார் செக்ஷன் 65ன் கீழ் செய்யப்பட்டுள்ள ரூல் XVIII A–ல் தெரிவித்துள்ளனர். அதன்படி.

1. தாம் வாங்கிய கடன்களைக் சட்டமுடியாமல் இன்சால்வென்ட் கொடுத்தவரும், கோர்ட்டால் அவ்விதம் தீர்மானிக்கப்பட்டவரும்.

2. ராஜீபமல்லாத பழிப்பான கிரிமினல் குற்றத்திற்குத் தண்டனை அடைந்தவர் சங்கத்தில் சேர்க்கப்படக்கூடாது. (இந்தவிதி குற்ற பரம்பரையினருக்கான சங்கத்திற்குப் பொருந்தாது). இந்தத்தடை தண்டனைத் தேதியிலிருந்து 5 வருஷங்களுக்கே அமலாகும்.

செக்ஷன் 7-படி அங்கத்தினராகச் சேர்க்கப்படும் நபர் மெஜாரிட்டி வயது வந்தவராய் இருக்கவேண்டும்.

மெம்பர் சங்கத்துடன் செய்துகொள்ளும் ஒப்பந்தங்களை நிறைவேற்ற வேண்டியிருக்குமாதலால் சங்க மாடல் பைலாக்கள் நல்லபுத்தி இல்லாதவரும், தொழில் செய்யமுடியாதபடி வியாதி யுள்ளவரும் அங்கத்தினராகச் சேர்க்கப்படக் கூடாது என்று கூறுகின்றன.

நாணயச் சங்கத்தில் சேர்க்கப்படும் மெம்பர்கள் ஒரே தொழில் அல்லது ஊர் அல்லது வகுப்பில் சேர்ந்தவராய் ஒருவரைபொருவர் அறியக் கூடியவராய் இருப்பது அவசியம். அப்படி இல்லாதவர்களை அங்கத்தினராகச் சேர்ப்பது கூடாது.

## விலக்கப்பட்ட ஒருவரைக் கூட்டுறவுச் சங்கம் மறுபடியும் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளுவதுபற்றி.

சாதாரணமான முறையில் விலகிய மெம்பரைச் சங்கம் மறுபடியும் சேர்த்துக்கொள்வதில் ஆட்சேபனை இல்லை. சங்க பைலாப்படி தனது கடனைக் கட்டாமல் பிராதுக்குப் போகவிட்டவரும், சங்கத்தை எந்த வகையிலாவது நஷ்டம் செய்ய முயன்று அதற்காக மகாசபையால் விலக்கப்பட்டவரும், அதுமுதல் இரண்டு வருஷத்திற்குள் எந்தச் சங்கத்திலும் மெம்பராகச் சேர்க்கப்படக்கூடாது (ரூல் XVIII B). ஆயினும், விசேஷ காரணங்களுக்காகச் சங்க ரிஜிஸ்திராரின் சம்மதம் பெற்று அத்தகைய ஒருவரை மீண்டும் மெம்பராகச் சேர்த்துக் கொள்ளலாம்.

ரூல் XVIII A (2) படி மெம்பர் பதவியைத் துறந்தவர் தமது இன்சால்வெண்டு அல்லது தண்டனை கோர்ட்டால் ரத்துச்செய்யப்பட்டதும் மறுபடியும் மெம்பராகச் சேர்த்துக்கொள்ளக் கோரினால் சங்கம் அதை மறுப்பது கூடாது.

## வாங்கிய கடனைத் தவணைபடி கட்டத் தவறும் மெம்பர்களைப்பற்றிய நிர்ப்பந்தங்கள்

i. தமது பங்குத் தொகையைக் கட்டத் தவறும் மெம்பர் தனது உரிமையைச் செலுத்த முடியாது. (செக்ஷன் 14)

ii. தாம் வாங்கிய கடனை, தவணைத் தேதிக்குப் பின்னரும் தொடர்ந்து மூன்று மாதங்களுக்குக் கட்டாமலிருக்கும் மெம்பர் அது காரணமாக அவர் சங்கத்தில் அல்லது சங்கத்திற்காக வகிக்கும் பதவியை இழப்பார். ரூல்(XXVIIf)

iii. பதவி வகிக்காத சாதாரண அங்கத்தினர் விஷயத்திலும் தவணை கடந்த பாக்கிக்காக ஆர்பிட்ரேஷன் தாவா தொடரப்பட்டுத் தீர்ப்பு செய்யப்பட்டால். அவர் அது காரணமாக அங்கத்தினர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

iv. ஒரு அங்கத்தினர் எந்தவகையிலாவது சங்கத்தின் நலத்திற்கு விரோதமாக நடந்தால் அவர் அது காரணமாகக் சங்க மகாசபையால் அங்கத்தினர் பதவியிலிருந்து நீக்கப்படலாம்.

v. சங்க நிர்வாகஸ்தர் எந்த வகையிலாவது சங்கத்திற்கு நஷ்டமுண்டாக்கி இருந்தால்

ரிஜிஸ்திரார் அவரை, செக்ஷன் 49படி சர்சார்ஜ் செய்யலாம்.

vi. சங்கத்தை ஊழலாக நடத்தும் கமிட்டியை, செக்ஷன் 43படி, ரிஜிஸ்திரார் பதவியிலிருந்து விலக்கிவிடலாம்.

இந்த வகையான நிபந்தனைகளால் இயக்கத்தின் ஒழுக்கத்தைக் காப்பாற்றச் சட்டம் வகை செய்துள்ளது.

## கூட்டுறவுச் சங்கம் மெம்பர்களிடம் மட்டுந்தான் தொழில் செய்யவேண்டும் என்பது ஏன்?

கூட்டுறவுச் சங்கங்கள் மெம்பர்களின் பொருளாதார நலத்தைக் கூட்டுறவு முறைமூலம் பெருக்கவேண்டும் என்பது முக்கியம்.

நாணயச் சங்கங்கள் மெம்பர்களுக்கு மட்டும் கடன் கொடுப்பதாலும், ஸ்டோர் சங்கங்கள் மெம்பர்களுக்கு மட்டும் சாமான்கள் விற்பதாலும் இந்த நலன் பெருக்கப்படுவதால் கூட்டுறவு நாணயச் சங்கங்களும், ஸ்டோர் சங்கங்களும் மெம்பர்களுடன் மட்டும் தொழில் செய்வதைக் கூட்டுறவுத் தத்துவமாகக் கருதுகின்றன.

அப்படியிருந்தும், நாணயச் சங்கங்கள் டிபாசிட்டர்களுக்கு அவர்கள் டிபாசிட்டுகள் ஜாமீன்பேரில் கடன்கள் கொடுக்கின்றன. ஸ்டோர் சங்கங்கள் பிரசாரங்கருதி மெம்பரல்லாதவர்களுக்கும் பண்டங்களை விற்கின்றன.

நெசவுபோன்ற உற்பத்திச் சங்கங்களின் நோக்கம் அங்கத்தினர்களுக்குப் பிழைப்பையும் நல்ல சம்பாதனையையும் தேடித்தருவது. ஆகவே, அவை அங்கத்தினர்களுக்கு மட்டும் உற்பத்திக்கான வேலை கொடுக்கின்றன. உற்பத்தியாகும் பொருள்களைச் சங்கம் வியாபாரிகளைப்போல் வெளியாரிடம் விற்கின்றன. இருந்தாலும் கிடைக்கும் லாபத்தை மெம்பர்களிடம் அவர்கள் உற்பத்தியை அனுசரித்துப் பிரித்துக் கொடுப்பதால் இந்தச் சங்கங்களும் அங்கத்தினர்களின் பொருளாதார நலத்தைப் பெருக்குகின்றன.

## ஒரு மெம்பர் தமது பங்குத்தொகை ஈட்டின் பேரில் கடன் வாங்கலாமா?

கம்பெனிகளில் பங்கு எடுத்தவர்கள் தங்கள் பங்குகளை வெளியில் அடகு வைத்துக் கடன் வாங்கலாம்.

கூட்டுறவுச் சங்கத்தில் பங்குப் பணம் போட்டவர்கள் அவ்விதம் செய்ய முடியாது. கூட்டுறவுச் சங்கத்தில் உள்ள பங்கை எந்த வெளியாரும் கடன் பாங்கிக்கு அட்டாச்சு செய்யக் கூடாது என்று செக்ஷன் 23 இருப்பதால் எவரும் கூட்டுறவுச் சங்கப் பங்குமீது கடன் கொடுக்கமாட்டார்கள். தவிர, சேரவேண்டிய பாக்கிக்கு அவரது பங்குத் தொகையை அவாலத்து செய்துகொள்ளும் உரிமை சங்கத்திற்கு இருப்பதால் பங்கு ஈட்டின்பேரில் கடன் கொடுப்பது கஷ்டமாக முடியும்.

ஒரு மெம்பர் தமது பங்கைத் தமது சங்கத்திற்கு அடமானம் வைக்கக்கூடாது என்று ரூல் XXI கூறுகிறது. மற்றச் சங்கங்களில் அடமானம் வைக்கலாமென்றாலும் சங்க பைலாக்கள் மேலே சொன்ன காரணங்களுக்காக அதை அனுமதிப்பதில்லை.

தனி நபர் ஒருவருடைய பங்கை ஈடாக வாங்கிக்கொண்டால் அது செல்லுபடியாகுமென்றாலும், அவர் நிச்சயமாய்ப் பங்குத் தொகையைச் சங்கத்திடமிருந்து பெறமுடியுமென்று கூறமுடியாது. ஆகவே, கூட்டுறவுச் சங்கப் பங்குத் தொகை ஈட்டின்பேரில் கடன் கொடுப்பதும், வாங்குவதும் கூடாது என்று கூறுவதே முறை.

(தொடரும்)

---

தொழிற்சாலைச் சட்டம்-20-ம் பக்கத் தொடர்ச்சி

இச்சட்டத்தை அமுல் நடத்துவதற்காகவே எந்த அதிகாரிகளாலும் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் எவ்வித நடவடிக்கைகளைக் குறித்தும், அவர்கள்மீது, எவ்வித தாவாவோ, கிரிமினல் வழக்கோ, வேறு நடவடிக்கையோ, எவரும் எடுத்துக் கொள்ள முடியாது.

செக்ஷன் 117

## இன்ஸ்பெக்டர்களின் கடமை

தொழிற்சாலைச்சட்ட இன்ஸ்பெக்டர்கள் வேலையிலிருக்கும் போதும், வேலையைவிட்டு விட்டபோதிலும் அவர்கள் அதிகார தோரணையில் தெரிந்து கொண்ட தொழிற்சாலை உற்பத்தி அல்லது வியாபார விஷயங்களையும், உற்பத்தி முறைகளையும் ரகசியமாகவே வைத்துக் கொள்ளவேண்டும். இச்சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட சந்தர்ப்பங்களைத் தவிர, வேறு எப்பொழுதும் அவ்விஷயங்களை அவர்கள் வேறு எவருக்கும் சொல்லக்கூடாது. ஆனால் அந்த வியாபாரம் அல்லது தொழிலின் சொந்தக்காரருடைய எழுத்துமூலமான அனுமதி பெற்று அவர்கள் இவ்விஷயங்களைச் சொல்லலாம். அல்லது இச்சட்டசம்பந்தமான சிவில் கிரிமினல் நடவடிக்கைகளிலும் அவைபற்றி ரிபோர்டுகள் அனுப்புவதிலும் சொல்லலாம். இந்த ஷரத்துக்கு மாறாக நடக்கும் பாக்டரி இன்ஸ்பெக்டர் குற்றம் செய்பவராவார். இக்குற்றத்திற்கு 6 மாதம் வரை சிறைத் தண்டனை அல்லது ரூபாய் 1000 வரை அபராதம் விதிக்கப்படலாம்.

செக்ஷன் 118

முற்றும்

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUVADAMARUDUR AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD, Editor V. S. VIJAYARAGAVACHARI, B.A., B.L.

187736




மேனி அழகு மட்டும் இருந்தால் போதாது!
ஆடை அழகும் வேண்டும்!
ஆடை அழகு பெற

—: அறந்தாங்கி :—

# 786 சங்கு சோப்பை

**வாங்கி உபயோகியுங்கள்**

**கட்டி 1-க்கு அணு 0-1-3தான்**

தயாரிப்பவர்:—

**இ.கா.ரு.மு.காதர் நயினு முகம்மது,**
786 சங்கு சோப் ஒர்க்ஸ், அறந்தாங்கி S. Ry.






# 'ஜெயராம்' ஹெர்னியா கியூர்


**குடல்வாத நிவாரணியை உபயோகியுங்கள்.**

3–தினத்தில் குணம் தெரியும்.

| | | | |
|---|---|---|---|
| எலிமெண்டரி கேஸ் | .... | ரூ. | 6-0-0 |
| செகண்டரி கேஸ் | ... | ரூ. | 11-0-0 |
| அட்வான்ஸ் கேஸ் | .... | ரூ. | 25-0-0 |

உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.

**G. ஜெயராம் வைத்தியசாலை,**
28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, :: கும்பகோணம்.




**Attarwalla Chawl!, Mori Road, Mahim Bombay, 4-2-48.**

ஐயா, எனக்குத் தாங்கள் அனுப்பிய ஹெர்னியா கியூர் சக்லவிர்த்தினியும், நான் இந்நாள்வரை அருந்தினேன். ஆனல் இன்றுதான் காயசுத்திப் பஸ்பம் சாப்பிடுகிறேன். லேகியத்திலேயே எனக்கு இருந்த விதைப்பையில் வீங்கிக்கொண்டிருந்த காற்று குறையத் தொடங்கி விட்டது. இன்னும் பஸ்பம் சாப்பிடுவதற்குள் அநேகமாகப் பேர்பாதிக்கு மேல் சுத்தமாகிவிடுமென்று நம்புகிறேன். இம்மருந்தைச் சாப்பிட்டு முடிந்ததும் இன்னும் 1 டின் ஹெர்னியா கியூர் வரவழைத்துச் சாப்பிட வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறேன். எத்தனையோ வைத்தியர்கள் கைவிட்ட இவ்வியாதிக்கு உயிருக்குத் துணிந்தே ஆப்ரேஷன் செய்ய வேண்டும் என்று நினைத்துக்கொண்டிருந்த சமயத்தில் உங்கள் விளம்பரத்தைக்கண்டு இதைக் கடைசி தடவையாய்ப் பார்த்து விடலாம் என்று முழுமனமில்லாமல்தான் தங்களின் மருந்தை வருத்தினேன். ஆனல் இன்றுதான் அதன் மகிமையை உணர்ந்து அளவிளாச் சந்தோஷமடைகிறேன்.

இப்படிக்கு,
**K. S. ஷண்முகம், பாம்பே.**

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57. விலாசம் "கோகுல்"

# டி. எஸ். ஆர். & கோ..

## கும்பகோணம்

REGISTERED TRADE MARK



பிராஞ்சு: (மன்னார்குடி.)

கூந்தலுக்கு வளர்ச்சியும் மூளைக்குக் குளிர்ச்சியும் கொடுப்பதில் நிகரற்ற சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம், கோகுல் கூந்தல் தைலம், வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள், பன்னீர், இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

*Sole Agents:*

For Madras
SURAJ AGENCIES,
MADRAS.

*For Coimbatore, Palghat & Nilgiris:*
B. BALAPATTABI CHETTIAR,
249, Vysyal Street.
COIMBATORE.